பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 திருவள்ளுவர் ஆண்டு 2036 ஆனி-16 30-06-2005 வியாழக்கிழமை ஓசை-132



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12122) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# சனாதிபதிக்கு எதிராகச் செயற்பட மகாநாயக்கர்களுக்குத் தொடர் அழுத்தம்!

## சங்க ஆணை பிறப்பிக்கவும் கோரிக்கை

(கொழும்பு)

***சனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக செயற்படுமாறு மகாநாயக்கர்களுக்கு பௌத்த பிக்குகள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்துவருவதாகவும், அவருக்கு எதிராக சங்க ஆணை பிறப்பிக்குமாறு விடுக்கப்பட்டுவரும்கோரிக்கைக்கு இருமகாநாயக்கர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.***

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள சனாதிபதிக்கு எதிராக சங்க ஆணை பிறப்பிக்குமாறு மல்வத்தை மகாநாயக்கர், அஸ்கிரிய மகாநாயக்கர், ராமான்ய மகாநாயக்கர், அமரபுர மகாநாயக்கர் ஆகியோருக்கு பௌத்த குருமார் அழுத்தம் கொடுத்துவருவதாகவும், இந்தத் தீர்மானத்திற்கு இரண்டு மகாநாயக்க தேரர்கள் ஆதரவு வழங்கியிருப்பதுடன், ஏனையவர்களின் ஆதரவு விரைவில் பெற்றுக் கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அஸ்கிரிய பீடாதிபதியின் ஆசீர்வாதத்துடனேயே பொதுக்கட்டமைப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறைப் பொறுப்பாளருடன் ஹொக்லண்ட் இன்று சந்திப்பு

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ருப் ஹொக்லண்ட் இன்று கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் முற்பகல் 10.00 மணியளவில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

மட்டக்களப்புக்குப்பயணம் செய்த போராளிகள் மீது கடந்த 26 ஆம் திகதி வெலிக்கந்தவில் வைத்து இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதல் தொடர்பாகத்தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர், போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுத் தலைவருடன் கருத்துக்களைப்பரிமாறிக் கொள்வார் எனத்தெரிகிறது.

## பத்திரிகை விநியோகஸ்தர் அம்பாறையில் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)



ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பின் பணியாளரான கன்னமுத்து அரசகுமார் பத்திரிகை விநியோகத்திற்காக சென்று கொண்டிருந்த வேளை நேற்றுக் காலை 8.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பத்திரிகைகளுடன் உந்துருளியில் திருக்கோவில் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, அம்பாறை மாவட்டம் அட்டப்பள்ளத்திற்கும், ஒலுவிலுக்கும் இடையில் வைத்து இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கோள்ளப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் நோக்கிய பயணத்தினை பொதுக்கட்டமைப்பு முன்னெடுத்துச்செல்லும்

### -ஐரோப்பிய யூனியன் வதிவிடப்பிரதிநிதி நம்பிக்கை

"அரசு-புலிகளுக்கிடையேயான சுனாமி பொதுக்கட்டமைப்பை ஐரோப்பிய யூனியன் வரவேற்கிறது. அதன் மூலம் சமாதானத்தை நோக்கிய பயணத்தினை முன்னெடுக்க முடியுமென நம்புகின்றோம்." என ஐரோப்பிய யூனியனின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி வூட்டர் வில்ரன் தெரிவித்தார்.

சுனாமி கடல் அனர்த்தத்தின் பின்னரான ஊடக பங்கெடுப்பு தொடர்பாக இலங்கை பத்திரிகைகள் முறைப்பாட்டு ஆணைக்குழுவால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு ஹலதாரிஹோட்டலில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் பயிற்சிப்பட்டறையில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் விபரிக்கையில் ; தலைநகரத்தை மட்டும் மையமாகக் கொண்டு கருத்துக்களை கூறமுடியாது. நாட்டின் அனைத்துப்பகுதிகளையும் சேர்ந்த மக்களின் கருத்துக்கள் முக்கியம். குறிப்பாக அனைத்து மக்களையும் ஒரு பொதுவான நோக்கத்தின் கீழ் கொண்டு வரவேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை விரைந்து செயல்படுத்த கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் கைச்சாத்திட்டுள்ள சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்பை துரிதமாகச் செயற்படுத்த வேண்டும் எனக்கோரி தமிழ்க்கட்சிகளும் பல அமைப்புக்களும் இணைந்துகொழும்பில் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தின.

கொழும்பு ஐந்துஇலாம்புச் சந்தியில் இருந்து ஊர்வலமாகச் சென்று கோட்டை பிரதான வீதியில் இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேல்மாகாண மக்கள் முன்னணி உட்பட பல அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தன. மேலும் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.

## பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சனாதிபதி செயலகம் விளக்கம்

ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பு குறித்து சனாதிபதி செயலகம் நேற்று விளக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பு குறித்து தவறான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இது குறித்து மக்கள் அவ தானமாக இருக்க வேண்டியது அவசியம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.சிலர் கூறுவதுபோல் தமிழீழ விடுதலைப்புலிகள் இதன் மூலமாக பலமடைவார்கள் என்பது தவறானது.

அதேபோல் திருகோணமலை துறைமுகம் காங்கேசன்துறை, பலாலி விமானநிலையம் போன்றவற்றின் கட்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சியை ஆட்சிக்கு கொண்டுவர நோர்வே ஏற்பாட்டாளர்கள் பிரயத்தனம்

### - பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

நோர்வே ஏற்பாட்டாளர்கள் எதிர்கட்சியை ஆட்சிக்கு கொண்டுவருவதில் முனைப்புக்காட்டுவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தத் தகவலை ஆசியன் ரிபியூன் இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

அண்மையில் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடும் வேளையில் இலங்கைக்கு வந்திருந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனிடமே இந்தக் குற்றச்சாட்டை பிரதமர் முன்வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்த விதார் ஹெல்கேசன் எதிர்க்கட்சித் தலைவருக்கு தற்போதைக்கு அரசாங்கம் ஒன்றை அமைக்கும் ஆர்வம் இல்லை எனக் குறிப்பிட்டிருந்தார்

(12ஆம் பக்கம் பார்க்க)

## காலி நகரப் பகுதிக்குள் கடல் அலைகள் உட்பிரவேசம்!

(கொழும்பு)

காலி நகரின் ரத்துக்கோட மற்றும் தெவட்ட ஆகிய பகுதிகளில் தீவிரமான கடல் அலைத் தாக்கங்கள் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல் அலையானது கொழும்பு-காலி பிர

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய சு.க.வின் மத்தியகுழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் இன்று மாலை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் சனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணியின் சனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பெயரைச்சிபாரிசு செய்வதற்குச் சில சிரேஷ்ட உறுப்பினர்கள் உத்தேசித்திருப்பதனால் இன்றைய கூட்டம் மிகமுக்கியம் வாய்ந்ததாக அமையுமென சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையக வட்டாரத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

நாட்டின் பல இடங்களில் நடைபெற்று வரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிகிளைக் கூட்டங்களில் ஏற்கனவே கட்சியின் அடுத்த சனாதிபதி வேட்பாளராகப் பிரதமரின் பெயரை சிபாரிசு செய்து அதுபற்றி கட்சி முக்கியஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் நேற்று இரவு பத்து மணியளவில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தவரை உந்துருளியில் வந்த இருவர் வழிமறித்து அவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் சின்னச்சாமி சிறிகாந்தன் என அறியவருகிறது. அதேபகுதியில் நடந்த மற்றொரு துப்பாக்கிச் சூட்டில் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார். (32)

**வரிவிளம்பரம்**

*10 நிமிடத்தில்*

***படங்கள்!!!***

பாஸ் மற்றும் சகல அடையாள அட்டைப் படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம். அவசரத் தேவைக்காக டிஜிட்டல் அல்பம் 24 மணிநேரத்தில் செய்து வழங்குகின்றோம். யாழ்ஒளி **K.S.R PHOTOS** இல 05 கனகபுரம் தெரு கிளிநொச்சி (6294)


*திருமண சேவை*

எம்மிடம் உள்நாட்டு வெளிநாட்டு அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இந்து. கிறிஸ்தவ மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன தொடர்புகளுக்கு கல்யாண வேலன் சர்வதேச திருமண சேவை இல.72 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.தபால்மூலமும் தொடர்பு கொள்ளலாம். (5384)

# முல்லை.சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனை நேற்று அரச அதிபரால் திறந்துவைப்பு







முல்லை.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நேற்று முல்லைத்தீவு நகரில் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் முற்றாக அழிவுக்குள்ளான முல்லைத்தீவில் அரச அரசசார்பற்றநிறுவனங்களுக்குரிய அலுவலகங்கள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டதனால் அப்பகுதிச் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்திருந்த நிலையில் மீண்டும் அவற்றை புனரமைக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நீர்ப் திட்டத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட இக் கட்டடத்திறப்பு விழா நிகழ்வு முற்பகல் 10.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி ஜெயகுலராஜா தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றி வைத்தார். மங்கலவிளக்கினை தமிழீழ கடற்படையின் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன், அரச அதிபர் பணிமனையின் உதவித்திட்டப் பணிப்பாளர். திருமதி. வில்வராசா, பங்குத் தந்தை ஜேம்ஸ்பத்திநாதர் அடிகளார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து பணிமனையின் பெயர்ப்பலகையினை 'இலங்கை' தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திறந்து வைத்தார்.

அடுத்து பணிமனையினை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் திறந்துவைத்தார்.

கலந்துரையாடல் மண்டபத்தினை தமிழீழ சுகாதாரசேவைப் பணிப்பாளர் விக்ரமன் திறந்துவைக்க, தாய்சேய் சிகிச்சை பிரிவினை கரைதுறைப் பற்று உதவி அரசஅதிபர் சோதிநாதன் திறந்துவைத்தார். தொடர்ந்து மாவட்ட சுகாதார வைத்தியஅதிகாரிக்கான மண்டபத்தினை முல்லை.மாவட்ட கட்டடத்திணைக்கள பொறியியலாளர் ஜெயசீலன் திறந்துவைத்தார்.

அடுத்து முல்லை. மாவட்ட பங்குத்தந்தை ஜேம்ஸ்பத்திநாதர் அடிகளாரின் ஆசியுரையுடன் ஆரம்பமான அரங்க நிகழ்வில் சிறப்புரைகளை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ கடற்படையின் அரசியல் துறைப் பொறுப்பாள் ரங்கன் ஆகியோர் நிகழ்த்த, முல்லைத்தீவு மாவட்டத்தின் சுகாதார செயற்பாடுகளில் ஏற்பட்டுவரும் ஆளணி மற்றும் ஏனைய வளப் பற்றாக்குறைகளை எடுத்துக்காட்டும் வகையில் தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் விக்ரமன், மாவட்ட வைத்தியஅதிகாரி தர்மேந்திரா ஆகியோர் உரைநிகழ்த் தினர். அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தியில் ஏற்பட்டு வரும் நெருக்கடி நிலைகளை எடுத்துக்காட்டும் வகையில் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் உரை நிகழ்த்தினார்.இந் நிகழ்வில் சுகாதாரத் தொண்டர்கள், அரசதி ணைக்கள பிரதிநிதிகள், அரசசார் பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச,8)

# எழுத்துத் தேர்வு

தமிழீழ வைப்பகத்திற்கு உத்தியோக உதவியாளர் தரம் - 03இல் ஆட்சேர்ப்பதற்கான எழுத்துத்தேர்வு எதிர்வரும் 03.07.2005 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் 12.00மணி வரை கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெறும். உரிய பரீட்சார்த்திகளிற்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் அருகிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளைகளில் தங்களது பெயர் விபரங்களைப் பார்வையிடலாம்.

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-12243)

# கேள்வி அறிவித்தல்

முல்லை மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ் காட்டப்படும் மாதங்களில் நிவாரண விநியோகம் மேற்கொள்வதற்கு தேவையான கோதுமை மாவினை (பிறீமா கறீன் பிரான்ட்) வழங்கக்கூடிய இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ சங்கங்களிலிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.

| விநியோகிக்கப்பட வேண்டிய காலம் | விநியோகிக்கப்பட வேண்டிய அளவு |
|---|---|
| யூலை 2005 | 200 மெற்றிக்தொன் |
| ஆகஸ்ட் 2005 | 200 மெற்றிக்தொன் |
| செப்ரம்பர் 2005 | 200 மெற்றிக்தொன் |

இதற்கான கேள்விப்படிவங்களையும், மேலதிக விபரங்களையும் இச் செயலகத்தில் 2005.07.27 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

(திருமதி.இமெல்டா சுகுமார்)
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு.

(சி.12268)

# கேள்வி அறிவித்தல்

முல்லை மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்காட்டப்படும் மாதங்களில் நிவாரண விநியோகம் மேற்கொள்வதற்கு தேவையான புழுங்கல் (சிவப்பு நாடு) வழங்கக்கூடிய இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ சங்கங்களிலிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.

| விநியோகிக்கப்பட வேண்டிய காலம் | விநியோகிக்கப்பட வேண்டிய அளவு |
|---|---|
| யூலை 2005 | 260 மெற்றிக்தொன் |
| ஆகஸ்ட் 2005 | 260 மெற்றிக்தொன் |
| செப்ரம்பர் 2005 | 260 மெற்றிக்தொன் |

இதற்கான கேள்விப்படிவங்களையும், மேலதிக விபரங்களையும் இச் செயலகத்தில் 2005.07.27 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

(திருமதி.இமெல்டா சுகுமார்)
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு.

(சி.12269)

# சலரோக நோயாளிகளுக்கான விசேட மருத்துவ சிகிச்சை

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இங்கிலாந்திலிருந்து வருகை தந்திருக்கும் மருத்துவ நிபுணரினால் சலரோக நோயாளிகளிற்கான விசேட சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை நடைபெறும். முக்கியமாக நீண்டகால சலரோக நோயாளிகளிற்கு விசேட மருத்துவ ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை வழங்கப்படவுள்ளது.சலரோக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் வெளிநோயாளர் பகுதியுடன் மேற்குறிப்பிட்ட தினத்தில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

# கண்ணீர் காணிக்கை

எமது வலயக் கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி. க. விஜயவினோதினியின் அன்புத் தந்தையார்

**அமரர். கனகரட்ணம் கந்தையா [பத்தர்]**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**உத்தியோகத்தர்கள்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**முல்லைத்தீவு.**

(சி.12270)

# வடகொரிய அணுசக்தி விவகாரம்
# இடைநிறுத்தப்பட்ட பேச்சு தொடரும் அறிகுறி

(சியோல்)

**வடகொரிய அணுசக்தி விவகாரம் தொடர்பாக இடைநிறுத்தப்பட்டுள்ள ஆறு நாடுகள் பங்குபற்றும் பேச்சுக்கள் அடுத்த மாத இறுதியளவில் மீண்டும் இடம்பெறக் கூடும் என்று தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

இம்மாத முற்பகுதியில் வடகொரியத் தலைவர் கிங்யொங்கில் ஒருவருடகாலமாகத் தடைப்பட்டிருந்த பேச்சுக்களை அடுத்த மாதம் ஆரம்பிக்க முடியும் என்று தெரிவித்திருந்ததைத் தென்கொரிய அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பங்காளித்துவ நாடாகவும், கௌரவத்துடனும் அமெரிக்கா வடகொரியாவை நடத்தினால் மாத்திரமே இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ள முடியுமென்றும் தென்கொரிய அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

. இதற்கிடையில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இணக்க அடிப்படையிலான ஆக்கபூர்வமான கருத்துக்களை வடகொரியா தொடர்பாகத் தெரிவித்திருந்தார்.

அதே சமயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த வடகொரியாவிற்கு விவசாய உதவிகளை வழங்க தென்கொரியா முன்வந்துள்ளது. தென்கொரிய அமைச்சர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்;

இவை அனைத்தும் சாதகமான நடவடிக்கைகளாகுமென்று குறிப்பிட்டார்.

இதற்கிடையில் ரஷ்யாவில் இன்ரபக்ஷ் ஸ்தாபனம் நேற்று முன்தினம் வெளியிட்ட செய்தியில் யூலை மாதப் பிற்பகுதியில் ஆறு நாடுகள் பங்குபற்றும் பேச்சுக்களில் கலந்து கொள்ள வடகொரியா தயாராகி வருவதாக ராஜதந்திர வட்டாரங்களை ஆதாரங்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.



அமெரிக்க இராணுவத்தினரின் தாக்குதலில்பலியான ஈராக்கின்ஷர் கியா தொலைக்காட்சிச் சேவைப் பணிப்பாளரான அகமட்வயெல் அல்பக்றியினது பூதவுடலுக்கு வணக்கம் செலுத்தும் ஈராக்கியர்கள்.



காசா முனையில் அமைக்கப்பட்ட யூதக் குடியிருப்பிலுள்ள பெண் ஒருவர் பலஸ்தீனர்களின் கல்லெறிக்குட்பட்டு காயமடைந்த நிலையில் அம்புலன்ஸ் வண்டியில் படுத்திருக்கின்றார்.

## தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்தவில்லை
## அமெரிக்க இராணுவத்தளபதி கூறுகிறார்

(வோஷிங்டன்)

ஈராக்கில் தாக்குதல் நடத்திவரும் தீவிரவாதிகளுடன் அமெரிக்க இராணுவம் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தவில்லை என்று அமெரிக்க இராணுவத்தளபதி ஜெனரல் ஜோர்ஜ் கேசி கூறியிருக்கிறார்.

பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்பு சன்னித் தலைவர்களைச் சந்திக்க விரும்புகிறோம். இவர்களுக்கு தீவிரவாதிகளிடம் மிகுந்த செல்வாக்கு உள்ளது என்றும் அவர் கூறினார்.

பிரிகேட் மட்டத்திலுள்ள தலைவர்கள் உள்ளூர் மற்றும் பழங்குடி இனத்தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறார்கள். தேசிய அளவிலுள்ள மூத்த சன்னித் தலைவர்களை இனிமேல் தான் சந்திக்கவேண்டும் என்றும் ஜெனரல் ஜோர்ஜ் கூறினார்.



ஈராக்கில் அண்மைய நாட்களில் தொடர்நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்க துருப்பினர் நேற்று பாக்தாத்துக்கு 125 மைல் அப்பாலுள்ள ஹிட் நகர பள்ளி வாசலைக் கடந்து செல்கின்றனர்.

## ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல்
## பாராளு. உறுப்பினர் உட்பட ஐவர்பலி

(பாக்தாத்)

ஈராக்கில் தலைநகர் பாக்தாத்தில் ஆளும் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் தாரி அலி அல்பயத் தீவிரவாதிகளின் தற்கொலைத் தாக்குதலில் பலியாகினார்.

தற்கொலைப் படைத்தீவிரவாதி ஒருவர் வெடிகுண்டு ஏற்றிய காரில் வந்து தாக்குதல் நடத்தியதாகவும், இதில் அவரும் அவரது மகனும், பாதுகாவலர்கள் மூன்று பேரும் பலியானார்கள்.

பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின் முதன்முறையாக சபை கூடியபோது, தற்காலிக சபாநாயகராக பயத் செயற்பட்டார். தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பலியான இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் இவர். ஏற்கனவே லமினா கதோரி என்ற பாராளுமன்ற உறுப்பினர் கடந்த ஏப்ரல் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## இன்னும் 200 ஆண்டுகளில் லண்டன் கடலில் மூழ்கிவிடும் ஆபத்து ஏற்படும்

(லண்டன்)

கடல் மட்டம் உயர்ந்து கொண்டேபோனால் இன்னும் 200ஆண்டுகளில் லண்டன் நகரம் கடலில் மூழ்கிவிடும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

பிரிட்ஜ் எனப்படும் குளிர்சாதனப்பெட்டிகளும், பாரவூர்தி, பேருந்து போன்ற மோட்டார் வாகனங்களும் தொழிற்சாலைகளும் வெளியேற்றும் கார்பன்-டை ஒக்ஸைட் என்னும் வாயு, உலகத்தின் வெப்பத்தை அதிகரிக்கச் செய்கிறது. இதனால் துருவப்பிரதேசங்களில் பனிக்கட்டிகள் உருகி கடலில் கலக்கின்றன. இதன்காரணமாக கடல் மட்டம் உயர்ந்து வருகிறது.

உலகம் வெப்பமாவதைத் தடுத்து நிறுத்தாவிட்டால் கடல் மட்டம் 84 மீற்றர் உயர்ந்து விடும். 200 ஆண்டுகளில் லண்டன் நகரம் கடலில் மூழ்கிவிடும். இங்கிலாந்து நாட்டின் பெரும்பாலான பகுதி கடலில் அமிழ்ந்துவிடும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்தில் உள்ள மலைப்பகுதி மட்டுமே மிஞ்சும், தென்மேற்கிலுள்ள மேடான பகுதியும் மூழ்காமல் தப்பிக்கும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

பெனிபீல்டுஹசர் ஆராய்ச்சி மையம் இது தொடர்பாக கணினி மூலம் எந்த எந்தப் பகுதிகள் மூழ்கிவிடும் என்பதை உருவாக்கியுள்ளது. உலகம் வெப்பமயமாவதைத் தடுப்பதற்காக சர்வதேச சமுதாயம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால் அது வேகம் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## முஸ்லிம் குடும்பங்களுக்கிடையில் மோதல் 15 பேர் பலி; 25 இற்குமேற்பட்டோர் காயம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் மின்டனோ தீவில் நேற்று முன்தினம் முஸ்லிம் குடும்பங்களுக்கிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 15 பேர் பலியாகினர். 25இற்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ளது மின்டனோ தீவு. இங்குள்ள சம்போன்கா சிபுகே மாகாணத்திலுள்ளது அலிசியா நகரம். இங்கு வசிக்கும் முஸ்லிம் சமூகத்தைச்சேர்ந்த இரண்டு குடும்பங்களுக்கிடையே நேற்று முன்தினம் பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து இரு தரப்பினரும் கடும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர்இச்சம்பவத்தில் 15பேர் உயிரிழந்தனா,25இற்கும் மேற் பட்டோர் பலத்த காயம் அடைந்துள்ளனர். சண்டையில் இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு பொலிசார் மற்றும் இராணுவத்தினர் விரைந்துள்ளனர். நிலைமை கட்டுப்பாட்டை மீறிச் செல்வதைத் தடுக்கவும்,மற்ற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.இவ்வாறு இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.



நேற்று முன்தினம் காலமான மணிலாவின் கர்தினால் ஜெய்ம்சின்னின் இறுதிக்கிரியையில் கலந்து கொள்ளும் பிலிப்பைன்ஸ் சனாதிபதி குளோரியா -அராயோ.

## பாலியல் விவகாரத்தில் விடுதலையான ஐவரை மீண்டும் கைதுசெய்ய பாக். உச்சநீதிமன்று உத்தரவு

(இஸ்லாமபாத்)

கிராம பஞ்சாயத்து உத்தரவு மூலம் ஒரு பெண்ணை பாலியல்வல்லுறவு செய்த வாலிபர்களை மீண்டும் கைது செய்ய பாகிஸ்தான் உச்ச நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

பஞ்சாப் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர் முக்தரன்மை (வயது-33) இந்த பெண்ணின் சகோதரர் செல்வாக்கு மிக்க இன்னொரு சாதிப் பெண்ணுடன் உறவு வைத்திருந்தார். இதற்காக அவரது அக்காவான முக்தரன் மையை ஒரு கும்பல் சேர்ந்து பாலியல்வல்லுறவுக் குட்படுத்தும்படி கிராமபஞ்சாயத்து தீர்ப்புக் கூறியது.

அதன்படி முக்தரன் மையை 14 பேர்கொண்ட கும்பல் மாறிமாறி பாலியல்வல்லுறவிற்குட்படுத்தியது. பாகிஸ்தானில் முஸ்லிம்கள் அதிகமாக உள்ள கிராமங்களில் இது போன்ற கொடூரமான பஞ்சாயத்து தீர்ப்புகள் இன்றும் நடைமுறையில் உள்ளது. முக்தரன் மையை ஒரு கும்பல் பாலியல்வல்லுறவு செய்த செயல் கடந்த 2002 ஆம் ஆண்டு நடந்தது. இது பற்றி அந்தப் பெண் உச்சநீதிமன்றில் வழக்குதொடர்ந்தார்.

இதனால் மேற்படி 14 பேர் மீது பிணையில் வெளியே வரமுடியாத உத்தரவை உச்ச நீதிமன்று பிறப்பித்தது. 2003-ஆம் ஆண்டு விசாரணையில் பெண்ணை பாலியல்வல்லுறவு செய்த 14 பேரில் நான்கு பேருக்கு மரண தண்டனையும், இரண்டு பேருக்கு ஆயுள்தண்டனையும் விதிக்கப்பட்டது. மீதி உள்ள எட்டுப் பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

லாகூர் உயர்நீதிமன்றில் மனித உரிமைகள் குழுக்கள் கடந்த மாதம் கடுமையாகப் போராடியதால் விசாரணை நீதிமன்றால் தண்டணை விதிக்கப்பட்ட ஐந்து பேரை விடுதலை செய்தது. மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு ஆயுள் தண்டனையாக மாற்றித் தீர்ப்புக் கூறப்பட்டது.

தன்னைப் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தியவர்களில் ஐந்து பேரை விடுதலை செய்த லாகூர் உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்ற முக்தரன்மை அப்பீல் செய்தார். மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டு லாகூர் உச்ச நீதிமன்றில் விடுதலை செய்த ஐந்து பேரையும் மீண்டும் கைது செய்ய உத்தரவிட்டனர்.

## சீனாவுக்கு விமானங்களை விற்கக்கூடாது
## அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்றது இஸ்ரேல்

சீனாவுக்கு போர் விமானங்களை விற்பதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்ததால் விற்பனையைக் கைவிட ஒப்புக் கொண்டுள்ளது. இஸ்ரேல் தன்னுடன் இராணுவ தொழில்நுட்பத்தை பகிர்ந்து சீனாவுக்கு விற்கக்கூடாது என்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறது.தோழமை நாடான இஸ்ரேலுடன் அமெரிக்க இராணுவ தொழில்நுட்ப இரகசியங்களை பகிர்ந்து கொண்டுள்ளது.

ஆள் இல்லாத உளவு விமானங்களை சீனாவுக்கு விற்பதற்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டது.இந்த விமானங்கள் சீனா வசம் இருப்பதை அமெரிக்கா விரும்பவில்லை. இதனால் எதிர்ப்புத் தெரிவித்தது. அதோடு இஸ்ரேல் மீது கடுமையான வர்த்தகத் தடைகளை விதித்தது. இதைத் தொடர்ந்து இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் தன் அதிகாரிகளை அமெரிக்காவுக்கு அனுப்பி பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கூறினார்.

அங்கு அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தைக்குப்பின் போர் விமான விற்பனையை நிறுத்தி வைப்பது என்று இஸ்ரேல் முடிவு எடுத்தது. அதோடு இராணுவ ஆயுத ஏற்றுமதி குறித்து அமெரிக்கா ஆய்வு செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டது.

# மோசமான நிலையில் பாலைப்பாணி கிராம வீதி

# போக்குவரத்து வசதியின்றி மக்கள் அவலம்

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளம், மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட பாலைப்பாணி கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதி கடுமையாகச் சேதமடைந் துள்ளதால் போக்குவரத்து வசதிகள் இன்றி மக்கள் அவதிப்படுகின்றனர்.**

மேற்படி மாங்குளம், துணுக்காய் சாலை வழியாக நான்குகிலோ மீற்றர் தூரமுள்ள மூன்று முறிப்புச் சந்தியை அண்மித்ததும் அங்கிருந்து தெற்குப்பக்கமாக உள்ள ஒன்பது கிலோ மீற்றர் தூரம் கொண்ட பாலைப் பாணி கிராமத்திற்குச் செல்லும் இப் பிரதான வீதியே கடுமையாகச் சேத மடைந்துள்ளது. இக்கிராமத்தில் நாற் பதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. விவசாயத் தொழிலை மேற்கொண்டு வரும் மக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய நீண்ட தூரம் கொண்ட மல்லாவி நகர்ப்பகுதிக்கே வரவேண்டிய நிலை உள்ளது.

இக் கிராமத்திற்குச் செல்வதற்கோ அல்லது அங்கிருந்து வருவதற்கோ போக்குவரத்துக்கான பேருந்து வசதிகள் அற்ற நிலை காணப்படுகின்றது. போக்குவரத்து வசதியின்மையால் இக்கிராம மக்கள் தங்களின் உறவுகளால் அனுப் பப்படும் தபால்களை உடன்பெற முடியாதுள்ளது. மேற்படி வீதிகடுமையாகச் சேதமடைந்துள்ளதால் நோயாளர்கள், பாடசாலை மாண வர்கள், விவசாயிகள் வயோதிபர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பல இடர் களை சந்திப்பதால் இவ்வீதியை உடன் புனரமைக்க சம்பந்தப்பட்ட வர்கள் முன்வரவேண்டுமென இக் கிராமமக்கள் கேட்கின்றனர். (24)



சுனாமியால் பாதிக்கப்பட்ட மருதங்கேணி பிரதேசத்தில் றீடோ/ வூஸ் நிறு வனத்தால் நடாத்தப்படும் தொழிற்பயிற்சியில் இணைந்துள்ள மாணவர் களுக்கு நேற்று முன்தினம் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. வூஸ் நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர் யசோ துவிச்சக்கர வண்டியினை வழங்கிவைப்பதனைப் படத்தில் காணலாம். (சோ)




கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைபணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுகாதார மன்றத்தில் கலந்து கொண்ட வைத்தி அதிகாரிகள், துறைசார் அலுவலர்களைப் படத்தில் காணலாம். (படம்-சோதி)

# கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு அழகக சங்கத்தின் பொதுக்கூட்டம்

(முள்ளியவளை)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு முள்ளியவளைப்பிரதேச அழகக சங்கத்தின் மாதாந்தப்பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முள்ளிய வளைப்பிரதேச அரசியல் துறைச் செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் முற்பகல் 10.00மணிக்கு சங்க தலைவர் செ.காண்டீபன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சங்க தலைவர் செ.காண்டீபன் கருத்துத்தெரிவிக் கையில் கரும்புலிகள் நாள் நிகழ்வில் சங்கத்திற்கான வேலைத்திட் டங்களை சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென கூறியதோடு கரும்புலிகளின் வீரம்,தியாகம், அர்ப்பணிப்பு தன்மைகளை எடுத் துரைத்தார் சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட அழகக சங்க உறுப் பினர்களுக்கு அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் வழங்கப் பட்ட பெறுமதி மிக்க தொழில் உப கரணங்கள் கையளிக்கப்பட்டதைப் பாராட்டி முல்லை.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித் தார், சங்கத்தின் நடவடிக்கை சுத்தம், சுகாதாரம், கட்டுப்பாடு போன்ற விட யங்களை வலியுறுத்தியும் உரை நிகழ்த்தியதையடுத்துத் தீமானங்கள் எடுக்கப்பட்டு சங்க செயலாளர் றொபின்சனின் நன்றியுரையுடன் மேற் படிக்கூட்டம் நிறைவுற்றது. (ஆ)



கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை முத்துஐயன்கட்டு வலது கரையில் உள்ள கிருபா என்பவரின் பசு மாடு ஒட்டிய நிலையில் இரண்டு கன்றுகளை ஈன்றுள்ளது. இக்கன்றுகள் அரை மணித்தியாலம் உயிருடன் இருந்து பின் இறந்துள்ளன.

# முன்பள்ளிகளின் மேம்பாடு குறித்து முல்லைத்தீவில் கலந்துரையாடல்

(முள்ளியவளை)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தால் நடை முறைப்படுத்தப்பட்டுவரும் முல்லை. மாவட்டத்திற்குட்பட்ட முன்பள்ளி முதன்மை ஆசிரியர்கள் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையப் பிரதேச இணைப்பாளர்கள், நிறுவன இணைப் பாளர்களுக்கான ஒன்று கூடல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது

முற்பகல் 10.30 மணிக்கு முல்லை. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக ஒன்று கூடல் மண்டபத்தில் துணுக் காய் வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் கு.கிருபைறஞ் சினி தலைமை யில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தலைமை யுரையினைத் தொடர்ந்து முன்பள்ளி களுக்கான பிரதேச மட்ட முன்பள்ளி சிறார்களுக்கான கண்காட்சி நிகழ்வு தொடர்பாகவும், பிரதேச மட்ட முன் பள்ளி சிறார்களுக்கான கலைநிகழ்வு தொடர்பாகவும், முன்பள்ளிச்சிறார் களுக்கான பிரதேச மட்ட விளை யாட்டு விழா தொடர்பாகவும் தீர்மானங் கள் எடுக்கப்பட்டதையடுத்து கண் காட்சி, கலைநிகழ்வு, விளையாட்டு விழா, முன்பள்ளிச்சிறார்களை வளர்த் தல், ஆசிரியர்கள் எவ்வாறு செயற் படவேண்டும் என்ற கருத்துக்களை உள்ளடக்கிய சிறப்புக் கருத்துரை யினை முல்லை.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட ஆலோசகர் பாலசுப்பிரமணியம் நிகழ்த்தினார். தொடர்ந்து நிறுவன இணைப்பாளர் கள், முன்பள்ளி ஆசிரியர்கள், முன் பள்ளி இணைப்பாளர்கள் தத்தமது பிரச்சினைகளை, கலந் துரையாடித் தீர்மானங்கள் எடுக்கப் பட்டதை யடுத்து புதுக்குடியிருப்புப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் ஜெயசீலியின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவானது. (ஆ)

# சமகால அரசியல் நிலவரம், கரும்புலிகள் நாள் குறித்து மல்லாவியில் விசேட கலந்துரையாடல்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச அம்பலப் பெருமாள் குளம் பகுதியில் சமகால அரசியல் நிலவரம் தொடர்பாகவும் எதிர் வரும் யூலை- 05 கரும்புலிகள் நாள் நிகழ்வினை மிகவும் உணர் வெழுச்சியுடன் நடத்துவதற்குமான விசேட கலந்துரையாடல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மாலை 4.00 மணியளவில் அம்பலப் பெருமாள் பொது நோக்கு மண்டபத்தில் கிராம சேவையாளர் மரியதாஸ் தலைமையில் நடை பெற்றது. நிகழ்வில் இன்றைய அரசி யல் நிலவரம் தொடர்பாக கருத் துரைத்த துணுக்காய் பிரதேச அர சியல் துறைப்பொறுப்பாளர் செ.புனி தன் கரும்புலிகள் நாள் நிகழ்வினை மிகவும் உணர்வெழுச்சியுடன் மக் கள் சிறந்த முறையில் செயற்படுத்த வேண்டும் அதற்கு இம் மக்கள் கிரா மத்தில் சிரமதானங்கள் மேற் கொண்டு கரும்புலிகள் நாள் நிகழ்வினை முன்னெடுக்க வேண்டும் என்று தெரி வித்தார். ஆலங்குளம் மாவீரர் துயி லும் இல்லத்தின் பொறுப்பாளர் சி.சசி கருத்துரைகளை வழங்கினார். இந் நிகழ்வில் மக்கள் ஒன்று கூடி கரும் புலிகள் நினைவாக நினைவு பரிசில் கள் வழங்குவதாகவும், கூறினார். இந் நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப் பல ரும் கலந்து கொண்டனர். (24)

# வடிகால்கள் அமைக்கப்படவில்லை திருத்தப்பட்ட வீதிகள் சேதம்

(மல்லாவி)

மாங்குளம், துணுக்காய் வீதி புனரமைக்கப்பட்டு தார் ஊற்றி செப்பனிடப்பட்டிருந்த போதிலும் வடிகால்கள் அமைக்கப்படாததால் வீதி மீண்டும் பழுதடைந்து பாரிய குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றது.

வடிகால்கள் அமைக்கப்படாததால் மழைநீர் வழிந்தோட முடியாது



வீதியைக் குறுக்கறுத்துப் பாய்ந்தோடுகின்றது.

இதனால் வீதிகளில் அறுத்தோடிகள் ஏற்பட்டு பாரிய குழிகள் காணப் படுகின்றன. இவ்வாறு வீதியில் ஆங்காங்கே பாரிய குழிகள் காணப்படுவதால் இவ்வீதியூடாக பயணம் செய்வோர் விபத்துகளுக்கு உள்ளாகின்றனர்.

இவ்விடயத்தில்சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென [illegible]திப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன (24)

# நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன அனுசரணையுடன் மருத்துவ சேவை

நலவாழ்வு அபிவிருத்தி நிறு வனத்தினால் வெளிநாட்டிலிருந்து வருகைதந்த வைத்தியர்களைக் கொண்டு மருத்துவசேவை வழங்கப் பட்டுள்ளது.

மேற்படி சேவையானது கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளி. இராமநாத புரம் மேற்கு அரசினர் வித்தியால யத்திலும், கடந்த திங்கட்கிழமை கல்மடுநகர் சம்புக்குளம் கயந்தா முன்பள்ளியிலும் இடம்பெற்றது. இதன்மூலம் இப்பிர தேசங்களைச் சேர்ந்த பெருமளவான மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

# வீதியோரக் குப்பைகளால் சுகாதார சீர்கேடு

(முள்ளியவளை)

முள்ளியவளை பிரதேச பிரதான வீதி ஓரங்கள் குப்பைகள் நிறைந்து சகாதார சீர்கேடான நிலையில் காணப்படுகின்றது. மழைவெள்ளம் ஏற்படும் போது வெள்ளம் ஓடமுடியாது வீதியை மூடிப்பாயும் நிலை தோன்றி வீதி சேத மடையும் நிலை காணப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என பொது மக்கள் கோரியுள்ளனர். (ஆ)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# கிராமிய வீதிகளை புனரமைப்பதில் இடர்பாடுகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர்

(யாழ்ப்பாணம்)

**யாழ். வலிகாமம் தென் மேற்குப் பிரதேசத்தில் உள்ள கிராமிய வீதிகளைப் புனரமைப்பதில் பல இடர்பாடுகளை எதிர் நோக்க வேண்டியிருப்பதாக வலி. தென் மேற்குப் பிரதேச செயலாளர் திருமதி. ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.**

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள சுமார் 20 இற்கும் மேற்பட்ட கிராமிய வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

எனினும் இவற்றைத் திருத்துவதற்கான கற்களை பெற்றுக் கொள்வதில் பல இடர்பாடுகள் காணப்படுகின்றது. குறிப்பாக கிரவற்கற்களை தோண்டுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள், கற்களின் விலைஅதிகரிப்பு வீதித்திருத்த வேலைகளுக்கான நிதி ஒதுக்கீடு போதாமை போன்ற பல இடர்பாடுகள் உள்ளன. இதனால் இவ்வாறான கிராமிய வீதிகளின் திருத்த வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார். (33)

# சாவகச்சேரியில் நவீன வசதிகளுடன் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தில் நவீன மயப்படுத்தப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் இந்த ஆண்டு இறுதிக்குள் திறக் கப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பெற்றோலிய நிறுவனத்தால் 120 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் பெற்றோல் நிரப்பு நிலைய கட்டடப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இவ் எரிபொருள் நிரப்பு நிலையம் கட்டி முடிக்கப்பட்டால் இப் பிரதேச மக்கள் எதிர் நோக்கிய எரிபொருள் பிரச்சினைகள் ஓரளவு தீர்வுக்கு வரும் என தெரிவிக்கப்படுகின்றது. (28)

# பெண்களுடன் சேட்டைவிட முயன்ற இரு இளைஞர்கள் நையப்புடைப்பு

(நல்லூர்)

வீதியால் சென்றுகொண்டிருந்த பெண்களுடன் சேட்டை செய்ய முயன்ற இரு இளைஞர்கள் பெண்கள் கூக்குரல் இட்டமையினால் கூடிய மக்களினாலும் கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்களினாலும் நையப் புடைக்கப்பட்டார்கள்.

யாழ்ப்பாணம் பல் கலைக்கழகத்திற்கு அண்மையாக இடம் பெற்ற இச் சம்பவத்தில் ஈடுபட்ட இரு இளைஞர்களும் கலாச்சாரத்தைப் பேணும் குழுவினரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன் எதிர் காலத்தில் இத்தகைய எந்தவொரு செயலிலும் ஈடுபடமாட்டோம் எனக் கூறிக்கடிதம் எழுதிக் கொடுத்து விட்டு அந்த இடத்தில் இருந்தும் சென்றனர். (41)

# இடப் பெயர்வு அவலங்களை நூலாக வெளியிட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடப்பெயர்வுகள் தந்த அவலங்களையும் அதனால் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களையும் தொகுத்து அதனை ஓர் நூலாக வெளியிட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோருக்கான விசேட சேவைத் திட்டத்தின் கீழ் இதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இடப்பெயர்வின் அவலங்களை அனுபவித்தவர்களது நேரடி அனுபவப் பகிர்வாக இது வெளிவரும் என இந்த நூல் வெளியிட்டு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

இந் நூல் இன்னமும் ஓரிரு மாதங்களுள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (33)

# கொட்டப்படும் கழிவுப் பொருட்களால் சுற்றுச் சூழல் பாதிப்பதாக முறைப்பாடு






நாயன்மார் கட்டு சனசமூக நிலையம், பாலர் பாடசாலை, நூல் நிலையம் ஆகியவற்றுக்கருகில் கொட்டப்படும் கழிவுப் பொருட்களால் சுற்றுச்சூழல் பாதிப்படைந்து வருவதாகக் தெரிவிக்கப்படுகின்றது.

நாயன்மார் கட்டு பாரதி சனசமூன நிலையம் அமைந்துள்ள இடத்திற்கு மிக அருகில் பலராலும், கொட்டப்படும் கழிவுப் பொருட்களால் இப்பகுதியில் சூழல் மாசுப்பட்டு இருப்பதுடன் சொப்பிங் பைகள் இப் பிரதேசக் குடிமனைகளுக்குள் காற்றில் பறந்து பரவிக் காணப்படுகின்றன. இதனால் சுற்றுச் சூழல் பாதிப்படைவதாகவும், சனசமூக நிலையம், பாலர் பாடசாலை, நூலகம் அமைந்துள்ள இடத்தில் குப்பைகள் பரவிக் காணப்படுவதாகவும் இது குறித்து யாழ் மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாரதி சனசமூக நிலையத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (28)

# இரு உப தபாலகங்களுக்கு நிரந்த கட்டடம் இல்லை

(தென்மராட்சி)

வரணி, கைதடி பகுதிகளுக்கு நிரந்தர உப தபால் அலுவலகக் கட்டடம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இப் பகுதிகளுக்கு நிரந்தர உப தபால் அலுவலகக் கட்டடம் கட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. பல வருடங்களாக வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் தபாலகங்களுக்கு நிரந்தரமான காணிகளை சம்பந்தப்பட்ட துறையினர் கொள்வனவு செய்து தபாலகக் கட்டடங்களை அமைக்க வேண்டும் என தமது வேண்டு கோளில் தெரிவித்துள்ளனர். (28)


# தொட்டிகள் கட்டப்பட்டு 8 மாதங்கள்; இது வரை குடி நீர் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார் கட்டில் ஐ.ஓ.எம் நிறுவனத்தால் கட்டப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் கடந்த எட்டு மாதங்களாக அநாதரவாக கிடப்பதாக பொது மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க அரச சார்பற்ற நிறுவனமான ஐ.ஓ.எம் மூலம் இப் பகுதியில் கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர் மூன்று இடங்களில் நிறுவப்பட்ட தண்ணீர்த் தொட்டிகள் மூலம் இன்னமும் மக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை.

நீர் வழங்கப்படும் என்று காத்திருந்த மக்கள் பொறுமை இழந்த நிலையில் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கும் யாழ். அரச அதிபருக்கும் முறைப்பாட்டை செய்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. (28)



# குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க காரை நகரில் நடவடிக்கை

(காரைநகர்)

யாழ். காரைநகரில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களுக்கு பவுசர்கள் மூலம் குடிநீரை விநியோகம் செய்ய ஊர்காவற்துறை பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனடிப்படையில் காரைநகர் கிழக்கிலுள்ள 380 குடும்பங்களுக்கும் காரைநகர் தென் கிழக்கில் உள்ள 100 குடும்பங்களுக்கும் காரைநகர் தெற்கிலுள்ள 260 குடும்பங்களுக்கும், காரைநகர் தென் மேற்கிலுள்ள 200 குடும்பங்களுக்கும் காரைநகர் வடகிழக்கில் உள்ள 225 குடும்பங்களுக்கும் இக் குடிநீர் விநியோகம் இடம்பெறுகிறது.

மேற்படிகுடிநீர் விநியோகங்கள் இடம்பெறும் பிரதேசங்களில் நிலவும் கடுமையான குடிநீர் தட்டுப்பாட்டைக் கவனத்தில் கொண்டே ஊர்காவற் துறை பிரதேச சபை இந்த நடவடிக் கையை மேற்கொண்டுள்ளது. (33)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் "எயிட்ஸ்" சிகிச்சை வசதிகள் இல்லை

யாழ். போதனா வைத்திசாலையில் எயிட்ஸ் நோயாளர்களுக்கான சிகிச்சைகளை வழங்கக்கூடிய வசதிகள் எதுவுமே இல்லாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இங்கு எயிட்ஸ் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கக்கூடிய நிபுணர்கள் எவருமே நியமிக்கப்பட்டாத நிலைமை காணப்படுவதுடன் எயிட்ஸ் நோயாளர்களுக்கான மருந்துப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

யாழ். மாவட்டமானது எயிட்ஸ் நோய்த் தரப்படுத்தலில் ஐந்தாவது இடத்தில் உள்ள போதும் யாழ். மாவட்டத்தில் எயிட்ஸ் நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் சிறந்த முறையில் இயங்கவில்லை.

இது மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (33)

# கணினி வசதி

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கி வருகின்ற நான்கு சமுர்த்தி வங்கி சங்கங்களிற்கு இந்த ஆண்டு முதல் கணினி வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரணி, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடிப் பிரதேசங்களில் உள்ள சமுர்த்தி வங்கிகளுக்கருகே வங்கிக்கு ஒரு கணினி என்ற விகிதத்தில் வழங்கப்படவுள்ளதாகவும் இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் சமுர்த்தி மகா சங்க உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (28)

# நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கத்தினால் நடத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நிலையத்தில் இக் கற்கை நெறியினைப் பயில விரும்புவோர் அடுத்த மாதம் 2ஆம், 3ஆம், 9அம் 10ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் முற்பகல் 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு நேரடியாகச் சமுகளிக்கலாம். முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் அனுமதி வழங்கப்படவுள்ளது.

*. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றின் பட்டதாரி அல்லது க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரு தடவையில் 03 சித்திகளுடன் க.பொ.த (சா.த)பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி பெற்றிருத்தல் அல்லது க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியுடன் கூடிய 06 சித்திகளுடன் நூலகத் துறையில் குறைந்தது 03 வருடங்களாவது தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (ஆங்கிலத்தில் சித்தியில்லாதவர்களுக்கு ஆங்கிலத்தில் தகுதிக்கான பரீட்சை நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சனாதிபதித் தேர்தல் எப்போது?

அடுத்த சனாதிபதித் தேர்தல் எப்பொழுது நடைபெறும். ரணில் விக்கிரமசிங்க கூறுவது போல் இவ்வருட முடிவில் அல்லது அடுத்த வருட இறுதியில் நடக்குமா? சந்திரிகா அம்மையார் சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று 1994 இல் சத்தியப்பிரமாணம் பெற்றுக் கொண்டார். பின் (இரண்டாவது தடவையாக) 1999 ஆம் ஆண்டு சகலரின் முன்னிலையில் சத்தியப பிரமாணம் செய்து கொண்டார். மீண்டும் 2000 ஆம் ஆண்டு எவரும் அறியாத வண்ணம் இரகசியமாக பிரதம நீதியரசர் சரத் என்சில்வா முன்னிலையில் சத்தியப்பிரமாணம செய்து கொண்டார்.

அவர் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பொழுது முப்படைத் தளபதிகளும் கலந்து கொண்டனர். சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட பின் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார். அதன்படி அவரது இரண்டாவது சனாதிபதி ஆட்சிக் காலம் ஆரம்பமாகி பதவிக் காலமும் 2005 ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி முடிவடையும்.

2000 ஆம் ஆண்டு மீண்டும் சரத்.என்.சில்வா முன்னிலையில் இரகசியமாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளதை அதிக நாட்களுக்குப் பின் அதாவது 2003 ஆம் ஆண்டு ஞாயிறு வார இதழ் (லங்காதீப பத்திரிகை) இந்த இரகசிய செயற்பாடு சம்பந்தமான செய்தியை பிரசுரித்திருந்தது. அதில் 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாவது தடவையாக சனாதிபதி சத்தியப்பிரமாணம் செய்துள்ளார் என்று குறிப்பிட்டிருந்தது. அது எந்த திகதியில் நடந்ததென்பதைப் பற்றி குறிப்பிட வில்லை. இந்த சத்தியப் பிரமாண வைபவத்தில் வெளி நாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் சனாதிபதியின் செயலாளரும் கலந்து கொண்டுள்ளனர். அவர்களுக்குப் புறம்பாக கலந்து கொண்டவர்களின் விபரங் கள் சரி வரத் தெரியாது.

ஏன் இரகசியமாக சந்திரிகா மூன்றாவது தடவையும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். என்பதைப் பற்றி தெரிந்து கொள்வது மிக சிரமமாகவுள்ளது. சாதாரணமாக ஒரு நாட்டின் சனாதிபதி சகலர் முன்னிலையில் மிக கோலாகலமாகவே சத்தியப்பிரமாணத்தை செய்து கொள்வது வழக்கம் இதில் முப்படைத்தளபதிகள், அமைச்சர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் கலந்துகொள்வது மிக அவசியம். ஆனால் சந்திரிகா அவர்கள் எதற்காக கள்ளத் தனமாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார் என்பதைப் பற்றி இது வரை சந்திரிகாவோ அல்லது அவரின் அரசாங்கமோ சரியான பதிலை நாட்டு மக்களுக்கு விளக்



கிக் கூறவில்லை.

சாதாரணமாக இந்த சத்தியப் பிரமாணத்தை விமர்சனம் செய்தல் எமக்கு ஒரு விடயம் முக்கியமாகத் தென்படுகிறது. முதலாவது சத்தியப்பிரமாணத்தினால் ஏற்படும் குறைகளை இரண்டாவது சத்தியப் பிரமாணத்தினால் நிவர்த்திக்க முடியும் என்பது சந்திரிகாவின் கணிப்பீடாகும். முதலாவது சனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறு வருடங்கள் பூர்த்தியடைந்தபின் அதாவது 2000 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்வதற்கு இடமிருந்தது. அப்படி அவர் 2000 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி சனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்திருந்தால் 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆறு வருடங்கள் பூர்த்தியாகும். துரதிர்ஷ்டவசமாக சனாதிபதி தேர்தலின் பொழுது குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி அவரின் கண் ஒன்று முற்றாக பார்வையற்று போயிற்று. ஆனபடியால் அவரால் உயிர்வாழ முடியுமா என்ற கேள்வியும் எழும்பியபடியால், அப்படிப்பட்ட தருணங்களில் எதை எப்படிச் செய்ய வேண்டுமென்று அரச யாப்பில் உறுதியாக எதையும் குறிப்பிட வில்லை. அப்படி அவர்இறந்து இருந்தால் சனாதிபதித் தேர்தலை இரத்துச் செய்து புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு இடம் இருந்தது. சனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் அவர் இறந்து இருந்தால் நாட்டின் பிரதமரை சனாதிபதியாக நியமித்து ஒருமாதம் கடந்த பின் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்று சனாதிபதி ஆட்சிகாலம் முடியும் வரை பிரதமர் சனாதிபதியாக ஆட்சி செய்ய முடியும். ஆனால் அப்போதைய சூழ்நிலையைப் பயன் படுத்தி தனக்கு ஏற்றவாறு சனாதிபதியினால் சத்தியப்பிரமாணம் என்ற நாடகத்தை அரங்கேற்ற முடிந்தது.

தெய்வாதீனமாக குண்டு வெடிப்பில் உயிர் தப்பினார். இறக்கவில்லை சுகமடைந்தார். 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி சனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டபடியால் அவரின் பதவி நீடிப்பு ஒரு வருடத்தினால் குறைந்துள்ளதென்பதை அவருக்கு மிக நெருக்கமானவர்களும், பிரதம நீதியரசரும தெரிந்து கொண்டனர். பல மாதங்களுக்குப் பிறகுதான் இவர்கள் இதைத் தெரிந்து கொண்டனர். அன்று நடந்த பிழையைத் திருத்திக் கொள்ள வேண்டிய தேவையுள்ளபடியால் இது சம்பந்தமாக பிரதம நீதியரசருடன் கலந்தாலோ சனை செய்து லங்காதீப சிங்கள நாளிதழில் தனக்கு மிக நெருங்கி செய்தியாளர் மூலமாக இந்த நாடக அரங்கேற்ற விபரங்களை தனது வாய் மூலமாக வெளியிடாமல் பத்திரிகை மூலமாக வெளியிட்டார். கடைசியில் பிரதம நீதியரசரால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட அறிக்கை மூலமாக ஊடகவியலாளருக்கு சனாதிபதியால் சன்மானம் வழங்கப்பட்டது.

மூன்றாவது தடவையாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளதைப் பற்றி சனாதிபதிக்கு மிக நெருக்கமான வெளிநாட்டமைச்சர் கதிர்காமரிடம் கேட்ட பொழுது சனாதிபதி மூன்றாவது முறையாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டது தமக்கு ஞாபகம் இருக்கிறதென்றும் அப்படி சத்தியப் பிரமாணம் சனாதிபதி செய்துள்ளார் என்று பிரதம நீதியரசர் சரத் என். சில்வா கூறியிருந்தால் அது பொய்யான செய்தியாக இருக்காதென கதிர்காமர் கூறினார்.

எது எப்படி இருந்தாலும் மூன்றாவது தடவை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டபடியால் 2006 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதிவரை 12 வருடகாலம் ஆட்சி செய்ய அவருக்கு உரிமை உண்டு என ஒரு சிலர் வாதாடுகின்றனர். ஆனால் அரசியல் யாப்பு சட்டப்படி அவர் இரண்டாவது தடவையாக சனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டது செல்லுபடியாகுமென யாப்பில் கூறப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு மறைந்த முன்னாள் சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை எடுத்துக் கொண்டால் அவர் சனாதிபதியாக 1978 ஆம் ஆண்டு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். பன்னிரெண்டு வருடங்கள் அவரால் ஆட்சி செய்ய முடியும். 1978ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரை அரசியல் யாப்பின் படி அவரால் ஆட்சி செய்ய முடிந்திருக்கும் ஆனால் அவர் 1988 ஆம் ஆண்டு சனாதிபதி பதவியில் இருந்து மரியாதையாக விலகிக் கொண்டார். இதை சந்திரிகா தனக்கு ஒரு படிப்பினையாக எடுத்துக் கொள்ள வேண்டும். பிரதம நீதியரசரால் தயாரிக்கப்பட்ட இந்த சிக்கலைத் தீர்ப்பதற்கு தேர்தல் ஆணையாளருக்கு மாத்திரமே உரிமை உண்டு. அவர் ஒரு இருதய நோயாளி அவர் தமது பதவியில் இருந்து விலகிச் செல்வதற்கான வயதெல்லையையும் கடந்துள்ளார். அவர் பதவியில் இருந்து நீங்குவதற்கு தேர்தல் யாப்பு சட்டம் திருத்தம் கொண்டு வரும்வரை முடியாத காரியமாக உள்ளது. இவர் தனது வயதெல்லை கடந்து ஓய்வில் செல்ல வேண்டுமென்று நீதிமன்றம் சென்றாலும் நீதிமன்றத்திலும் அவருக்கு கருணைகாட்ட மாட்டார்கள். அடுத்த சனாதிபதித் தேர்தல் நாளை நியமிக்கும் அதிகாரம் இவருக்கு இருக்கின்றபடியால் அதுவரைக்கும் இவர் ஓய்வில் செல்ல முடியாது. இதனால் தனது வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகும் என்ற பயம் இவருக்கு ஏற்பட்டுள்ளது. எது எப்படி இருந்தாலும் சனாதிபதித் தேர்தலை முன் கூட்டி இவர் அறிவிக்க வேண்டும். இதனை ஏற்பதற்கு மறுப்புக்கள் கிளம்புமானால் நீதிமன்றம் சென்று முறைப்பாடு செய்து அங்கு வழங்கப்படும் தீர்ப்பின்படி இவர் நடந்து கொள்ள வேண்டும்

ராவய சிங்கள நாளிதழ்
கட்டுரை ஆசிரியர் விக்டர் ஐவன்
மொழியாக்கம். அ.சக்திவேல்

## தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்ட செயலகம் பாட்டாளிபுர கிராமத்தில் 250 நிரந்தர வீடுகள் நிர்மாணிப்பு

போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக 250 நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டமொன்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை மாவட்டச் செயலகம் மூதூர் கிழக்கிலுள்ள பாட்டாளி புரம் கிராமத்தில் ஆரம்பித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்ட திட்ட அலுவலர் வே.கலைவாணன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் இத்திட்டத்தின் கீழ் முதலாவது வீட்டுக்கான அத்திவாரக்கல்லை லண்டன் வெண்புறா நிறுவனத்தலைவர் டாக்டர். என்.சத்தியமூர்த்தி நாட்டினார். ஐந்து இலட்சம் ரூபா செலவில் ஒவ்வொரு வீடும் நிர்மாணிக்கப்படவுள்ளது. மேலும் இந் நிகழ்வில் சத்தியமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில்; பாட்டாளிபுரம் கிராமத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் என்பவற்றை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியை லண்டன் வெண்புறா நிறுவனம் வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கருத்துத் தெரிவிக்கையில் மக்களின் பங்களிப்பும் ஒன்றுபட்ட செயற்பாட்டின் மூலமாகவும் தான் கிராமத்தின் அபிவிருத்தியை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார். (25)

## காவல்துறையினரால் வீதி ஒழுங்கு நடவடிக்கைகள் தீவிரம்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச காவல்துறையினரால் வீதி ஒழுங்கு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றது.

மேற்படி பிரதேச பிரதான வீதிகளில் பெருமளவான வாகனங்களும், உந்துருளிகளும் அதிகரித்து அதிவேமாகச் செல்வதால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் முகமாக வேகக்கட்டுப்பாடு, மற்றும் வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளிலும், உந்துருளியிலும் அருகருகாக இருவர் மூவர் செல்வதைத்தவிர்ப்பது வாகனங்களில் குறிப்பாக உழவு இயந்திரங்களில் பாரம் ஏற்றும் போது சிவப்பு நிற அடையாளம் தொடங்க விடப்பட வேண்டும் போன்ற நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி வருவதுடன் காலை நேரங்களில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பு கருதி பாடசாலைகளின் முன்பாகவும் முற்சந்திகளிலும் காவல்துறையினர் கடமையில் ஈடுபட்டுவருவதை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி நடவடிக்கையினால் பல வீதிவிபத்துக்கள் தடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை காவல்துறையினரால் சட்ட ஒழுங்கு நடவடிக்கை பற்றிய விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டுவருகின்றது. (ஆ)

## கண்ணி வெடியில் சிக்கி பெண் படுகாயம்

மன்னார் எழுத்தூர் காட்டுப் பகுதியில் விறகு எடுக்கச் சென்ற 32 வயதுடைய பெண் ஒருவர் நிலக் கண்ணி வெடிக்குள் அகப்பட்டு படுகாயமடைந்துள்ளார். தற்சமயம் மேற்படி பெண் அநுராதபுரம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (18)

## நியாப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொதுக்கிணறுகள் தனியாருக்கு சொந்தமாகும் அபாயம்

(முள்ளியவளை)

கரைதுறைப்பற்று பகுதியில் நியாப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொதுக் கிணறுகள் தனியாருக்கு சொந்தமாகும் அபாய நிலை காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொதுக்கிணறுகள் தனியாருக்கு சொந்தமான சில காணிகளில் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அக்காணியினை காணி மாற்றம் செய்து பொதுக் காணியாக்காத நிலையில் காணிக்காரர்கள் பொதுக் கிணறுகளை ஆக்கிரமிக்கும் நிலை தோன்றியுள்ளது. இதேவேளை மேற்படி திட்டத்தின் கீழ் பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டகாலங்களில் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபங்கள் உத்தியோக பூர்வமாக மக்களிடம் கையளிக்கப்படாத நிலையிலும், வேலைகள் முழுமையாக முடிவடையாத நிலையிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மக்களின் நலன்கருதி மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மக்களை நேரடியாகச் சென்றடைய வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.(ஆ)

## அனிஞ்சியன்குளம் மாணவர்களால் சாரணிய வாரம் கடைப்பிடிப்பு

(மல்லாவி)

இலங்கை சாரணிய சங்கத்தின் வேலை வார நிகழ்வுகள் கடந்த 18ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை நடைபெற்றுள்ளது. அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் 50 சாரணிய மாணவர்கள் மல்லாவிப் பிரதேசத்தில் கரும்புலிகள் நினைவாலயங்கள் கோவில்கள் மற்றும் பொது இடங்களில் தமது சிரமதானப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் கிராம ரீதியாக வீட்டுத்தரிசிப்புக்களையும் மேற்கொண்டனர். இந்நிகழ்வில் பாடசாலை சாரணிய ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர். (24)

# சிறிலங்காவின் அரசியல் மோதல்கள் வெளிநாட்டு முதலீடுகளை முடக்கும்

## ஆ.அ.வங்கி, உலக வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

**சிறிலங்காவில் வெளிநாடுகள் முதலீடு செய்வதற்கான சூழலுக்கு உள்நாட்டு அரசியல் மோதல்கள் முட்டுக்கட்டைபோட்டுவருவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவை எச்சரிக்கை விடுத்துள்ளன.**

இந்த இரு வங்கிகளும் கூட்டாக நடத்திய ஆய்வுகள் வெளிநாட்டினரை ஈர்க்கும்படியான சாதகமான சூழல் சிறிலங்காவில் இல்லை. நிலையற்ற அரசு, பலவீனமான உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்டவைகளைச் சுட்டிக் காட்டுகின்றது.

ஆய்வறிக்கையில், வெளிநாட்டினர் முதலீடு செய்ய அரசியல் நிலைத்தன்மை ஏற்படவும், பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வு காணவும் வழி காணப்படவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக உலக வங்கி செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சிறுபான்மை அரசாக உள்ள சனாதிபதி சந்திரிகாவின் அரசு, இதர கூட்டணிக் கட்சிகளாலும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளதையும் உலக வங்கி செய்திக் குறிப்பு வெளிப்படுத்தியிருக்கிறது. நிரந்தர அமைதியை இலங்கையில் ஏற்படுத்தினால் தான் இங்கு முதலீட்டாளர்களுக்கான சாதகத் தன்மை ஏற்படும் என்று உலக வங்கியின் சிறிலங்காவுக்கான இயக்குநர் பீற்றர் ஹெரால்ட் கூறினார்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை சிறிலங்காவின் சிறு வணிகர்கள் உள்ளிட்டோரிடம் இந்த ஆய்வை நடத்தியுள்ளது.

# ஆறு மாதங்கள் கடந்தும் பாடநூல்கள் கிடைக்கவில்லை

## -இ.த.ஆ. சங்கம் கண்டனம்

(திருகோணமலை)

இவ்வாண்டின் ஆறுமாதங்கள் கடந்தும் ஏழாம் வகுப்பிற்குரிய இவ்வாண்டுக்கான பாடநூல்கள் இன்னும் வழங்கப்படாதது கண்டனத்துக்குரியது. இவ்வாறு கூறும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி வெளியீட்டுப்பிரிவு ஆணையாளருக்கு அவசர கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளது.

ஏழாம் வகுப்பிற்குப் புதிதாக அறி முகப்படுத்தியுள்ள புவியியல், வரலாறு, குடியுரிமைக் கல்வி போன்ற பாடங்களுக்கான நூல்களில் பாரிய எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள், கருத்துப் பிழைகள் உள்ளன. இவற்றை திருமலையில் நடைபெற்ற கல்விக் கூட்டத்தில் கல்விக் கழகமும் தாமும் இணைந்து சகல பிழைகளையும் சுட்டிக்காட்டி அதற்கான திருத்தங்களையும் கூறி எழுத்துவடிவில் தயாரித்து வழங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைச் சீர்செய்து புதிய புத்தகம் வெளியிடுவதாக கல்வி வெளியீட்டுப் பிரிவு உறுதி யளித்திருந்தும் இன்னும் திருத்திய நூலோ, திருத்தாத நூலோ எதுவுமே அனுப்பப்படவில்லை. இது தமது மாணவர்களுக்கு காட்டப்படும் பாரபட்சம் என்று இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (32)

# பொதுக்கட்டமைப்புக்கு அவுஸ். வரவேற்பு விரைவாக செயற்படுத்தவும் வலியுறுத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டுள்ளதை வரவேற்பதாகவும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க இப் பொதுக் கட்டமைப்பு உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டௌனர் இத்தனை விரைந்து செயற்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே இருதரப்பு நம்பிக்கையை வளர்த்தெடுக்க இது உதவும். பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப் பட்டிருப்பதை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஏப்ரல் 2003 முதல் முடங்கிக் கிடக்கும் அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்க இருதரப்பினரும் முன்வர வேண்டும். இலங்கை அமைதிப் பேச்சுகளுக்கு அவுஸ்திரேலியா உறுதியான ஆதரவை அளிக்கும். இலங்கையில் தொடரும் வன்முறைகள், படுகொலைகள் கவலையளிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்தப் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும். இலங்கையில் அமைதியை கட்டியெழுப்ப, மனிதாபிமான உதவிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள பல்வேறு திட்டங்களுக்காக அவுஸ்திரேலிய அரசு இந்த ஆண்டு 39.8 மில்லியன் டொலரை ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் பத்து மில்லியன் டொலர் ஆழிப்பேரலை நிவாரண உதவியில் உள்ளடங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 2006 நவம்பரில் சனாதிபதித் தேர்தல் அரசு கவிழும் நிலையில் இல்லை

## அமைச்சர் சி.பி ரத்னாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறும் என்று அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

அதிகாிகம மேரி மௌண்ட் கல்லூரி நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய ரத்னாயக்க இதைத் தெரிவித்தார். மேலும் அவர் பேசியதாவது: 2006 ஆம் ஆண்டு நவம்பருக்கு முன்னதாக சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் நடைபெறாது. ஆளும் கூட்டமைப்பு அரசில் விரிசல் ஏற்பட்டிருந்தாலும் அரசு கவிழாது. ஆளும் அரசுக்கு 114 ஆசனங்கள் இருந்தன. பொருந்தாத கூட்டணி என்று அறிந்திருந்தும் ஜே.வி.பியுடன் நாம் கூட்டமைப்பு ஏற்படுத்தினோம். பொதுக் கட்டமைப்பு ஆவணத்தை பார்க்காமலேயே பொதுக்கட்டமைப்பின் பெயரால் அரசை விட்டு அவர்கள் வெளியேறிவிட்டார்கள். பொதுக் கட்டமைப்பானது நிவாரண உதவி வேண்டி நிற்கும் சிங்களவர் உள்ளிட்ட அனைவருக்குமானது.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய கடமை இந்த அரசை உருவாக்கிய அனைத்து கட்சிகளுக்குமே உண்டு. சில பௌத்த பிக்குகள் தாங்கள் அணிந்திருக்கும் காவி உடைக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்வது வருத்தமாக இருக்கிறது என்றார் அவா.

# பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு நீதிமன்றில் இரு வழக்குகள் தாக்கல்

## ஹெல உறுமயவும் நடவடிக்கையில் இறங்கும்

(கொழும்பு)

தேசிய பிக்கு முன்னணி பொதுக் கட்டமைப்புக்கு எதிராக நேற்று முன்தினம் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.இந்த வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இலங்கை நாட்டின் இறைமைக்கு இந்த பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் தமது மனுவில் புனர்வாழ்வு அமைச்சின் செயலரை பிரதிவாதியாக குறிப்பிட்டுள்ளதாக குறிப்பிட்டார். தேசப் பற்றுள்ள தேசிய இயக்கமும் நேற்று முன்தினம் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக மனுத்தாக்கல் செய்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் எனக்கூறப்படும் சண்முகலிங்கத்துடன் புனர்வாழ்வு அமைச்சின் செயலர் செய்து கொண்ட ஒப்பந்தமானது சட்டவிரோதம் என்றும் எனவே இது இரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் தனது மனுவில் கேட்டுள்ளது.

இதேவேளை பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜாதிகஹெல உறுமயவும் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யவுள்ளது.(32)

# புதிய கிழ. பிராந்திய கடற்படைத் தளபதி திருமலை. இணைப்பதிகாரியாகவும் நியமனம்

கிழக்குப் பிராந்திய சிறிலங்கா கடற்படைத் தளபதியாக சனாதிபதி சந்திரிகாவால் நியமிக்கப்பட்டிருக்கும் றியர் அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்கு திருகோணமலை பாதுகாப்பு இணைப்பதிகாரி என்ற புதிய பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாக இருந்த றியர் அட்மிரல் சரத் வீரசேகர அந்தப் பொறுப்பிலிருந்து சனாதிபதியால் திடீரென நீக்கப்பட்ட பின்னர் அவரது இடத்திற்கு தற்போது வடமத்திய மாகாண கடற் படைத்தளபதியாக உள்ள றியர் அட் மிரல் வசந்த கரன்னகொட நியமிக்கப்பட்டார். இவருக்கு மேலதிகமாக திருகோணமலை பாதுகாப்பு இணைப்பதிகாரி பொறுப்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

இதன் பிரகாரம் திருகோணமலை மாவட்டத்தி லுள்ள முப்படைகளுடன் பொலிஸ் பிரிவும் றியர் அட்மிரல் வசந்த கரன்னகொடவின் கட்டளையின் கீழ் வரும் திருமலையில் சர்ச்சைக்குரிய வகையில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை தொடர்பாக ஏற்பட்டுள்ள வன்செயல்களுடன் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ள ஓட்டோ சாரதிகளுக்கான கூட்டம் ஒன்றில் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் வீரசேகர உரையாற்றியதாகப் புலனாய்வுத் தகவல்கள் சனாதிபதிக்கு வழங்கப்பட்டன. இதையடுத்து அவரை உடனடியாகக் கிழக்கு கடற்படைத் தளபதி பொறுப்பிலிருந்து இடம் மாற்றுமாறு கூட்டுப்படைத்தளபதியும், கடற்படைத்தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்திரிக்கு சனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டார்.

எனினும் அண்மையில் திருமலையில் வைக்கப்பட்ட புத்தர் சிலையால் ஏற்பட்ட வன்செயல்களுக்கும் தனக்கும் தொடர்புண்டென புலனாய்வுத்தகவல்கள் தெரிவித்ததை றியர் அட்மிரல் வீரசேகர முற்றாக மறுத்தார். இதேவேளை கிழக்கு கடற்படைத்தளபதியான றியர் அட்மிரல் வீரசேகரவை மேற்குக் கடற்படைத் தளபதியாகவும், மேற்கு கடற்படைத்தளபதியாகவுள்ள றியர் அட்மிரல் சரத்ரட்ண கீர்த்தியை கிழக்கு கடற்படைத்தளபதியாக மாற்றுவதற்கு கடற்படைத் தளபதி தயா சந்தகிரி தீர்மானித்திருந்தார்.

ஆனால் இந்தத் திட்டத்தை சனாதிபதி மாற்றியமைத்து கடற்படைத் தலைமையகத்தில் பிரதித் தலைமை அதிகாரி என்ற புதிய பொறுப்பொன்றை உருவாக்கி அந்த இடத்திற்கு றியர் அட்மிரல் சரத் வீரசேகரவை நியமித்துள்ளார்.

றியர் அட்மிரல் ரட்ணகீர்த்தி அவரது பழைய இடத்திலேயே உள்ளார். கடற்படைக்கென முதன் முதலாக இந்தப் பதவி உருவாக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே இது போன்ற பதவி இராணுவத்தில் உள்ளது. கடற்படையில் சேவையின் அடிப்படையில் றியர் அட்மிரல் சரத் வீரசேகர ஐந்தாவது இடத்திலுள்ளார். றியர் அட்மிரல் மோகன் விஜய விக்கிரம இரண்டமிடத்திலும், றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட மூன்றா வது இடத்திலும் றியர் அட்மிரல் ரட்ண கீர்த்தி நான்காவது இடத்திலும் உள்ளனர். றியர் அட்மிரல் வீரசேகர கடந்த பெப்ரவரி இரண்டாம்திகதி கிழக்கு மாகாண கடற்படைத்தளபதியாகப் பொறுப் பேற்றார். இதற்கு முன்னர் அவர் கடற்படைத் தலைமையகத்தில் கடற்படை நடவடிக்கை இயக்குநராக இருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

# பொதுக்கட்டமைப்பு குறித்து முஸ்லிம் பிரதிநிதிகள்–சனாதிபதி இணக்கம்

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் அரசியல் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சிகளுடன் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தியுள்ளதாக சனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதில அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடன்பாடொன்றை எட்டிய அதே நேரம் இவ்விடயத்தில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டாதாகவும் முஸ்லிம்களுக்கும் இதில் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென முஸ்லிம் கட்சிகள் குரலெழுப்பியிருந்தன.

தங்களது கோரிக்கைகளைக் கவனத்திலெடுக்காத பட்சத்தில் அரசிலிருந்து வெளியேறப் போவதாக முஸ்லிம் அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் சந்திரிகாவிற்குக் கடும் அழுத்தம் கொடுத்ததுடன இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இரு நாள் வரை அவகாசமும் வழங்கியிருந்தனர்.

இந்த விவகாரத்தால் முஸ்லிம் கட்சிகளிடையேயும் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் இடையிலும் கடும் வாதப்பிரதிவாதங்களும் எழுந்ததுடன் இவர்களைத் தூண்டிவிட்டு பிரச்சினையை மேலும், சிக்கலாக்கும் முயற்சியில் சில இனவாதக் கட்சிகளும் தீவிரம் காட்டின.

எனினும் இது தொடர்பாகத் திங்கட்கிழமை முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களை அரச தலைவர் செயலகத்திற்கு அழைத்த சந்திரிகா இது தொடர்பாக விரிவாகப்பேசி உடன்பாடொன்றுக்கு வந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதற்கமைய பொதுக்கட்டமைப்பு பிராந்தியக்குழுவில் அரச தரப்பில் இடம்பெறும் இருவரில் ஒருவரை முஸ்லிம் தரப்பிற்கு விட்டுக்கொடுக்க இந்த சந்தர்ப்பத்தில் சந்திரிகா இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இருக்கும் இரு அரச பிரதிநிதிகளில் ஒருவரை முஸ்லிம் பிரதிநிதியாக நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி பிரதேச குழுக்களில் நான்கு முஸ்லிம் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர். அத்து டன் இந்தக் குழுக்களில் இரு முஸ்லிம் பிரதித்தலைவர்களை நியமிப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# திருமலைத் துறைமுகப்பகுதி பொதுக்கட்டமைப்பின் கீழ்

# விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது

### -கொழும்பு பல்கலை அரசறிவியல் விரிவுரையாளர் தயான்ஜயதிலக

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகப்பகுதி பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையின்கீழ் வருவதால் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் செல்வதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. கொழும்புப் பல்கலைக்கழக அரசறிவியல் விரிவுரையாளர் தயான் ஜயதிலகவினால் எழுதப்பட்டுள்ள இந்தச் செய்தியில், கடல் கோளினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை துறைமுகப்பிரதேசமும், அதனை அண்டிய பிரதேசங்களும் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையின் கீழ் வருவதாகவும் இந்த உடன்படிக்கையின் கீழ் அமைக்கப்படவிருக்கும் கிளிநொச்சியைத் தளமாகக் கொண்ட விடுதலைப் புலிகளின் பெரும்பான்மைப் பலம் கொண்ட பிராந்தியக் குழுவின் கீழ் இந்தப் பிரதேசம் வரவிருப்பதா கவும் அவர் தமது செய்தியில் சுட்டிக் காட்டியுள்ளார். வடக்கு, கிழக்கில் உள்ள ஆறு மாவட்டங்களில் கடற்கரையிலிருந்து உட்பக்கமாக இரண்டு கிலோமீற்றர் தூரப் பிரதேசம் பொதுக் கட்டமைப்பு நிர்வாகத்தின் கீழ் வருகிறது. இந்த நிர்வாகப் பிரதேசத்திலிருந்து திருகோணமலை துறைமுகப் பிரதேசத்துக்கு விலக்களிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கும் தயான் ஜயதிலக இதன் மூலம் கிளிநொச்சியைத் தலைமையகமாகக் கொண்டியங்கவுள்ள சுனாமி நிவாரண நடவடிக்கைகளுக்கான முகாமைத்துவக் கட்டமைப்பின் பிராந்தியக் குழுவின் கீழ் இந்தப் பிரதேசத்தின் புனர்நிர்மாணப் பணிகள் கொண்டுவரப்படுமென்றும் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். எனினும், இது தொடர்பாக தான் சிறிலங்கா சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தற்போது செய்துகொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை நடைமுறையிலுள்ள போர்நிறுத்த உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதாகவும் போர்நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் படையினரது உயர் பாதுகாப்பு வலயங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருப்பதாகவும் இதனால், திருகோணமலை துறைமுகப் பிரதேசம் போன்ற படையினர் நிலைகொண்டுள்ள உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் பொதுக்கட்டமைப்பு செயற்பாடுகளின் கீழ் வராது என்றும் ஜயந்த தனபால தெரிவித்ததாகவும் தயான் ஜயதிலக தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

### முஸ்லிம்களுக்கு பொதுக்கட்டமைப்பில்

## தனித்தரப்பு இன்மையைக் கண்டித்து காத்தான்குடியில் ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

வடக்குக் கிழக்கு மாகாண சுனாமி பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து காத்தான்குடியில் ஹர்த்தாலும், கடையடைப்புப் போராட்டமும் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

முஸ்லிம் மாணவர் அமைப்பு என்ற பேரில் இந்தக் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்தக் ஹர்த்தால் தொடர்பாக அந்த அமைப்பு துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அந்தத் துண்டுப் பிரசுரத்தில் அரசாங்கத்தின் மீது கண்டனம் தெரிவித்ததுடன் முஸ்லிம் அமைச்சர்களை பதவி விலகுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணை; அரசியல்கட்சிகளுடன் ஹெலஉறுமய பேச்சு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவு திரட்டும் வகையில் அரசியல் கட்சிகளுடன் ஜாதிக ஹெல உறுமய பேச்சுவார்த்தைகளை தொடங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியுடனும் ஜே.வி.பி யுடனும் எதிர்வரும் வாரங்களில் இது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள ஜாதிக ஹெல உறுமய முடிவு செய்துள்ளது. ஆழிப்பேரலை நிவாரணசபையில் கையெழுத்திட்டால் சனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணையும் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையும் கொண்டுவரப்படும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்ததேரர் கடந்த 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். ஆழிப்பேரலை நிவாரணசபைக்கு எதிராக உயர் நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர வும் ஜாதிகஹெல உறுமய நடவடிக்கையெடுத்து வருவதாகத் தெரிகிறது.

## பல்கலை கல்வி சாரா ஊழியர் வேலை நிறுத்தம் தொடர்கிறது

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெறுகின்றது. இந்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக நேற்றைய தினம் பல்கலைக்கழங்களிலும், உயர் கல்வி நிறுவகங்களிலும் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

தமது சம்பள முரண்பாட்டை நீக்குமாறு அனைத்துப் பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் கோருகின்றனர். வடக்கு கிழக்கு உட்பட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் கல்வி சாரா ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

### இவ்வருட இறுதிக்குள் 25 இலட்சம் அடையாள அட்டைகள் வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

இவ்வருட முடிவில் 25 இலட்சம் அடையாள அட்டைகளை விநியோகம் செய்வதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. சகல மாவட்டங்களிலும் இருந்து முப்பது இலட்சம் அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் கிராம சேவையாளர் மூலமாக ஆட்பதிவு திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது. திடீரென நாட்டில் தேர்தல்கள் நடந்தால் கட்டாயமாக தேசிய அடையாள அட்டைகள் வாக்காளர்களுக்கு தேவைப்படுகின்றது. எனவே துரிதகதியில் அடையாள அட்டைகளை விநியோகம் செய்வதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக ஆணையாளர் எச்.கே கீர்த்தசேன தெரிவித்துள்ளார்.

## சனாதிபதியுடன் ரணில் மட்டுமே பேசவேண்டும்; ஐ.தே.க அரசியல் பீடம் தீர்மானம்

(கொழும்பு)

அரசியல் விவகாரங்கள் தொடர்பில் சனாதிபதியுடன் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் பீடம் தீர்மானித்துள்ளது. கடந்த வாரத்தில் சனாதிபதி தரப்பினர் பாராளுமன்ற உறுப்பினர்களான மிலிந்த மொறகொட,றுக்மன் சேனாநாயக்க, வஜிர அபேவர்த்தன ஆகியோருடன் தொடர்ச்சியாகப் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதையடுத்தே ஐக்கிய தேசியக்கட்சி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. கட்சியின் இந்த முடிவு தொடர்பில் சனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.(32)

## சனாதிபதித் தேர்தலில் பௌத்த தலைவர்; ஜாதிக ஹெல உறுமய தீர்மானம்

பஞ்சசீல கொள்கைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் பௌத்த தலைவர் ஒருவரை சனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்போவதாக ஹெல உறுமயக் கட்சி தெரிவித்துள்ளது. தமது கட்சி முன்வைத்துள்ள பஞ்சசீல கொள்கைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் பௌத்த தலைவர் ஒருவரை அடுத்த சனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப் போவதாக ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார். சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பை இரத்துச் செய்யுமாறு சனாதிபதியை எழுத்துமூலம் எவரேனும் கோரினால் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படுமெனவும் எல்லாவல மேதானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.


உங்கள் குழந்தைகளை அபாக்கஸ் பயிற்சியால்

கணித மேதை

ஆக்குகின்றோம்

GAMA ABACUS

★அபாக்கஸ் பயிற்சி (Abacus Training) ★மனக்கணிதம் (Mental Arithmetic) ★ஞாபகக்கலை (Memory Techniques)

உலக பிரபல்யமான Gama Mental Arithmetic ன் ABACUS பயிற்சி நெறி மூலம் 5 தொடக்கம் 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் ஞாபகசக்தி, அபாரமான கிரகிக்கும் தன்மை, துல்லியமும் வேகமும், மனக்கணக்கில் திறமை, தன்னாற்றல், அனைத்து கல்வியிலும் திறன், கூர்ந்து கவனிக்கும் வல்லமை, நுண்ணியமான கேள்விசக்தி, தன்னிறைவு போன்ற பல ஆற்றல்களைப் பெற்று திறமைசாலியாகின்றார்கள்.


எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பமாகிறது
Gama ABACUS Academy
கிளி.மத்திய கல்லூரி முன்பாக
கண்டி வீதி
கிளிநொச்சி
ஜூலை 3 ஆம் திகதிக்கு முன்னராக பதிவுகளை மேற்கொள்ளவும்.

GAMA MENTAL ARITHMETIC (P) LTD. Bhuvana Complex, Calvery Road,West Fort, Thrissur, Kreala,india. Tel:0091 487 3090908,

(6311)

WANTED FRANCHISE ALL OVER SRILANKA & ABROAD


## 31 ஆம் நாள் நினைவு நிகழ்வும் நன்றி நவிலலும்



மலர்வு: 02.03.1981

உதிர்வு: 03 .06.2005

## அமரர் கிருஷ்ணபிள்ளை ஜெகன்

## (களனி பல்கலைக்கழக மாணவன்)

03.06.206 அன்று இறைபதம் அடைந்த அமரர் கிருஷ்ணபிள்ளை ஜெகன் அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களிற்கும் நேரிலும் ஊடகங்கள் வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களிற்கும் இறுதிநிகழ்வில் உதவிகள் புரிந்த அனைவரிற்கும் எமது குடும்பம் சார்பாக நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (03.07.2005) காலை (8.00 மணியளவில்) எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் நினைவு நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வண்டுகின்றோம்.

4 ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு

(6179)

தகவல்
குடும்பத்தினர்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை எதிர்த்து பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்படும்!

## பா.ஜ.க. துணைத்தலைவர் வெங்கையா நாயுடு

காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை எதிர்த்து பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்படும் என அகில இந்திய பாரதிய ஜனதாக்கட்சியின் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று அவர் பேட்டியளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம் ஜூலை 21,22,23 ஆகிய திகதிகளில் சென்னையில் நடைபெறும்.

வாஜ்பாய்,அத்வானி,பாரதிய ஜனதா ஆளும் மாநில முதல் மந்திரிகள், எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்பட முக்கிய தலைவர்கள் இக் கூட்டத்தில் பங்கேற்பார்கள்.

அடுத்த வருடம் ஆரம்பத்தில் தமிழ்நாடு, கேரளா, புதுவை மாநில சட்டமன்ற தேர்தல்கள் நடைபெறுவது குறித்து செயற்குழுவில் முக்கிய விவாதம் நடத்தப்படும். விலைவாசி உயர்வு, காஷ்மீர் உள்ளிட்ட சில மாநிலங்களில் அதிகரித்து வரும் தீவிரவாத செயல்கள் குறித்தும் விவாதிக்கும்.

காங்கிரஸ் தலைமையிலான சனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தேன்நிலவு முடிந்துவிட்டது. ஒற்றுமையும் குலைந்துவிட்டது.

காங்கிரஸ் கூட்டணியில் ஒற்றுமை இல்லை. கம்யூனிஸ்டு கட்சிகள் திடீரென்று மத்திய அரசுக்கெதிராகப் போராட்டத்தில் இறங்கி இருப்பது அரசின் நிலையற்ற தன்மையைக் காட்டுகிறது. அரசியல் ஆதாயத்துக்காக மத்திய அரசை எதிர்ப்பது போல் நாடகம் ஆடுகின்றன.

மத்திய அரசில் அங்கம் வகிகித்துக்கொண்டு அந்த ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்துவது கேலிக்கூத்து.

பெற்றோல், டீசல் விலைஉயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கி காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு எதிராக வருகிற பாராளுமன்றக் கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வர பாரதியஜனதா முடிவுசெய்துள்ளது. இது குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் ஆலோசித்து வருகிறோம்.

தீர்மானம் வரும்போது மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள் யார் என்பது தெரியவரும்.

சேது சமுத்திரத்திட்டம் வரவேற்கத்தக்கது. இத்திட்டத்திற்கு அரசு வெளியிட்ட விளம்பரத்தில் ஆட்சியில் இருப்போர் படங்கள் இல்லை. தா.பாண்டியன், வரதராஜன் போன்றோரின் படங்களை வெளியிட்டுள்ளனர். தமிழக முதலமைச்சர் சில குறைகளைக் சுட்டிக்காட்டி தொடக்கவிழாவைப் புறக்கணித்துள்ளார்.

அவற்றை சரிசெய்து திட்டத்தை விரைவாகச் செயற்படுத்த வேண்டுமென வெங்கையா நாயுடு மேலும் கூறினார்.

## ஆந்திராவுக்கு அடுத்த தலைவலி பாப்லி; மகாராஷ்டிராவுடன் மோதல் ஆரம்பம்

ஆந்திரா அரசுக்கு அடுத்து விஸ்வரூபம் எடுக்கும் பிரச்சினை பாப்லி அணைகட்டும் விவகாரம். ஆந்திராவில் உள்ள கோதாவரிக்குக் குறுக்கே அணை கட்டும் மகாராஷ்டிரா அரசின் திட்டத்தைத் தடுக்க விரைவில் அனைத்துக் கட்சிக்குழு பிரதமரைச் சந்திக்கவுள்ளது.

ஆந்திராவில் மிக முக்கிய ஆறுகளில் ஒன்று கோதாவரி. அது மகாராஷ்டிராவில் இருந்து வரும் நதிகளின் தண்ணீர் மூலம் நிரம்புகிறது. தற்போது எல்லையில் மகாராஷ்டிரா, தன்பக்கம் பாப்லி என்ற அணையைக் கட்ட திட்டமிட்டுள்ளது. இப்படி அணைகட்டினால் கோதாவரி குறுக்கே ஆந்திரா அரசு கட்ட திட்டமிட்டுள்ள ஸ்ரீராம்சாகர் அணைக்குத் தண்ணீர் கிடைக்காது.

இந்த விடயத்தில் ஆந்திர அரசு எவ்வளவோ நடவடிக்கை எடுத்தும் மகாராஷ்டிரா அரசு கண்டுகொள்ளவே இல்லை. ஆரம்ப கட்டப்பணிகளை ஆரம்பித்துள்ளது. அடுத்த சில நாட்களில் இத்திட்டத்திற்குத் தடைபோட நடவடிக்கை எடுக்காவிட்டால் நம் கையை விட்டு கோதாவரி இழக்கப்பட்டுவிடும் என கட்சிகள் தெரிவிக்கின்றன.

## சேதுசமுத்திரத் திட்ட ஆரம்பவிழா யூலை-2; ஆர்ப்பாட்டம் நடத்த ஜெயலலிதா முடிவு!

(சென்னை)

சேது சமுத்திர திட்டவிழா அன்று அ.தி.மு.க சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் தி.மு.க தலைமையில் அமைந்த சனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் பெரு முயற்சியால் சேது சமுத்திரத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்தின் தொடக்க விழா அடுத்த மாதம் இரண்டாம் திகதி மதுரையில் நடைபெறுகிறது.

இதில் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி, தி.மு.க தலைவர் கருணாநிதி, ஆளுநர் பர்னாலா மற்றும் சனநாயக கூட்டணிக்கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கிறார்கள். இந்த விழாவில் தான் கலந்து கொள்ளப்போவதில்லை என்று அறிவித்துவிட்ட தமிழக முதல்வர் ஜெயலலிதா, சேது சமுத்திரத்திட்டத்திற்கு தமிழக அரசிடமிருந்து முறையாக தடையில்லாச் சான்றிதழ் பெற வில்லை என்று குற்றம் சாட்டினார். இந்நிலையில் சேதுசமுத்திரத்திட்ட தொடக்க விழா நடைபெறும் அன்றைய தினம் அ.தி.மு.க சார்பில் போராட்டம் ஒன்றையும் அறிவித்துள்ளார் ஜெயலலிதா.

இது தொடர்பாக ஜெயலலிதா ஒப்புதலுடன் அ.தி.மு.க தலைமைக்கழகம் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.



பெற்றோல்-டீசல் விலை உயர்வைக் கண்டித்து பாரவூர்தி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் புதுவை கோரிமேடு பகுதியில் ஏராளமான பாரவூர்திகள் இயங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.




இந்தியாவில் பெற்றோல்-டீசல் விலை உயர்ந்து விட்டதால் இனி மேல் கழுதை மீதுதான் பயணம் செய்ய வேண்டும் என்பதைச் சித்தரிக்கும் வகையில் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கழுதையில் வந்து நூதன போராட்டம் நடத்திய காட்சி.

## 9 நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கு விற்க மத்தியஅரசு முடிவு; இடது சாரிகள் கண்டனம்

(புதுடில்லி)

இலாபத்துடன் இயங்கும் 'பெல்' நிறுவனம் உட்பட ஒன்பது நிறுவனங்களின் பங்குகளைத்தனியாருக்கு விற்க மத்திய அரசு முடிவு செய்திருப்பதற்கு இடதுசாரிக் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

மத்திய அரசு குறைந்தபட்ச செயற்றிட்டத்தில் இருந்து விலகிச் செல்வதாகவும் புகார் கூறிய இடதுசாரிக்கட்சிகள் ஆளும் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் புறக்கணிக்கப் போவதாகவும் அறிவித்தன. இதனால் ஆளும் கூட்டணியில் நெருக்கடி ஏற்படுமா என்ற கேள்வியும் எழுந்தது.

இதையடுத்து சோனியா உத்தரவின் பேரில் பிரதமர் மன்மோகன்சிங் இடதுசாரி கட்சிகளைச் சமாதானப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். இந்திய கம்யூனிஸ்டு பொதுச்செயலாளருடன் அவர் தொலைபேசியில் பேசினார்.

காங்கிரஸ் தலைவியும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவியுமான சோனியா நேற்றுக் காலை சிம்லாவில் இருந்து தொலை பேசியில் பிரகாஷ்சரத்துடன் பேசினார். சிம்லாவில் இருந்து புதுடில்லி திரும்பியதும் பங்குவிற்பனை தொடர்பாக கட்சியின் உயர்மட்டக் குழுவுடன் ஆலோசனை நடத்துவேன் என்றும் சோனியா உறுதி அளித்தார்.மத்திய அரசு தனது முடிவை வாபஸ் பெறுமா? என்பதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

சோனியா இப்பேது இமாச்சலப் பிரதேசத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளைபார்வையிட்டு வருகிறார்.

## ஜெயலலிதாவின் இரு சொத்துக் குவிப்பு வழக்கு நேற்று பெங்களூர் தனி நீதிமன்றில் ஆரம்பம்

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை பெங்களூர் தனி நீதிமன்றில் நேற்று ஆரம்பமாகியது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு மற்றும் லண்டன் விடுதி வழக்கைச் சேர்த்து ஒரே வழக்காக விசாரிக்க பெங்களூர் தனி நீதிபதி பச்சாப்பூரே கடந்ததிங்கட்கிழமை உத்தரவிட்டார். லண்டன் விடுதி வழக்கில் இரண்டாவது எதிரியாக இருந்து வந்த தினகரன் எம்.பி.. முதல் வழக்கான சொத்துக் குவிப்பு வழக்கின் ஐந்தாவது எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இந்த வழக்கில் தமிழக முதல்வர் ஜெயலலிதா, சசிகலா,இளவரசி,சுதாகரன் ஆகியோர் முதல் நான்கு எதிரிகளாக உள்ளனர்.

சொத்துக் குவிப்பு வழக்குடன், லண்டன் விடுதி வழக்கும் இணைக்கப்பட்டிருப்பதால், சொத்துக் குவிப்பு வழக்கு முதலில் இருந்து மீண்டும் விசாரிக்கப்பட இருக்கிறது. இந்த வழக்கில் ஏற்கனவே விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள், திரும்ப அழைக்கப்பட்டு மீண்டும் விசாரிக்கப்படவுள்ளனர். ஜெயலலிதா உட்பட வழக்கின் எதிரிகள் அனைவரும் திரும்ப அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுவரென தெரிகிறது. மேலும், சொத்துக் குவிப்பு வழக்கில் ஐந்தாவது எதிரியாகத் தினகரன் சேர்க்கப்பட்டிருப்பதால்,அவர் மீது கூடுதல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

சொத்துக் குவிப்பு வழக்கு மற்றும் லண்டன் விடுதி வழக்கை இணைக்கக் கோரி தமிழக முதல்வர் ஜெயலலிதா தாக்கல் செய்த மனு மீதான விசாரணை பெங்களூர் தனி நீதிமன்றில் கடந்த நான்கு மாதங்களாக நடந்து வந்தது. தனி நீதிமன்றில் இணைக்கப்பட்ட வழக்குகளின் விசாரணை அதிகாரபூர்வமாக நேற்று தொடங்கியது.

## "சேது" திட்டத்தை "ஜெ" எதிர்ப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது!

### –அமைச்சர் டி.ஆர்.பாலு குற்றச்சாட்டு

(புதுடில்லி)

அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையிலேயே சேது சமுத்திரத்திட்டம் இடம் பெற்றுள்ளது. தற்போது அற்பமான சுற்றுச்சூழல் காரணங்களைச் சொல்லி முதல்வர் ஜெயலலிதா அதை எதிர்ப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது. சேது சமுத்திரத்திட்ட தொடக்க விழாவிற்கு முதல்வர் ஜெயலலிதாவுக்கு அழைப்பிதழ் அனுப்பட்டுள்ளது. அவர் வந்தாலும், வராவிட்டாலும் நிகழ்ச்சி நடக்கும்" என மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் டி.ஆர்.பாலு குற்றம்சாட்டியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் வெளிநாட்டு நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் மத்திய கப்பல் துறை மற்றும் தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் டி.ஆர்.பாலு கூறியதாவது; சேது சமுத்திரத்திட்டம் உண்மையிலேயே ஒரு முன்னேற்றத்திட்டம். இந்தத்திட்டம் நிறைவேறுவது எல்லோருக்கும் வெற்றியே. அற்பமான சுற்றுச்சூழல் காரணங்களைக் கூறி தேவையற்ற பிரச்சினைகளை எழுப்பி இந்தத்திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா எதிர்த்து வருகிறார்.

சேது சமுத்திரத்திட்டத் தொடக்க விழா மதுரையில் ஜூலை இரண்டாம் திகதி நடக்கவுள்ளது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் சோனியா, தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் பிரதமர் மன்மோகன் சிங் இததிட்டத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார்.

சேது சமுத்திரத்திட்ட தொடக்க விழாவில் கலந்துகொள்ள தமிழக முதல்வருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத்திட்டம் இரண்டாயிரத்து 227 (கோடி) ரூபா மதிப்பீட்டில் அடுத்த மூன்றாண்டுக்குள் நிறைவேற்றப்படவுள்ளது. இந்தியாவையும், இலங்கையையும் பிரிக்கும் மன்னார் வளைகுடாவில் மேடாக உள்ள கடல் ஆழப்படுத்தப்படும்.

இதனால் கப்பல்கள் மேற்குக்கரையில் இருந்து கிழக்குக் கடற்கரைப் பகுதிக்கு வர கொழும்பைச்சுற்றி வரவேண்டியதில்லை. 424 கடல் மைல் தூரம் குறைவதோடு கப்பலின் பயண நேரமும் ஏறக்குறைய 30 மணி நேரங்கள் குறையும் என அவர் தெரிவித்தார்.

# லெப்.கேணல் கில்மன் நினைவாக கிரிக்கெட் போட்டி
# மத்தியமுனை அணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது









சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்து 28.06.1995 அன்று திருமலையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்.கேணல் கில்மன் அவர்களின் நினைவு நிகழ்வு, ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் கடந்த நாட்களில் நடாத்தப்பட்ட மென்பந்து சுற்றின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வின் முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை முறியடிப்பு அணியின் தளபதி ஆரமுதன் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை வைத்தியகலாநிதி அஜந்தன் அவர்களும், பொது மாவீர்களுக்கான ஈகச்சுடரினை ராதா வான்காப்பு படையணியின் தளபதிகளில் ஒருவரான செம்பியன் அவர்களும், பொது மாவீரர் படத்திற்கான மலர் மாலையினை போர்க் கருவித் தொழிலக பொறுப்பாளர்களில் ஒருவரான தமிழ்ச்செல்வி அவர்களும் அணிவிக்க, லெப்.கேணல் கில்மன் அவர்களின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரினை பெண்கள் ஆய்வு நிறுவன பொறுப்பாளர் சுபா அவர்களும், படத்திற்கான மலர்மாலையினை படையறிவியல் கல்லூரி தளபதி மணிமாறன் அவர்களும் அணிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து மத்தியமுனை அணிக்கும் தென்முனை அணிக்கும் இடையில்இறுதிஆட்டம்ஆரம்பமாகியது. இதனை மேற்கு கட்டளை பணியகத் தளபதிகளில் ஒருவரான நளன் அவர்களும் வடபோர்முனை கட்டளைத் தளபதிகளில் ஒருவரான லோரன்ஸ் அவர்களும், முறியடிப்பு அணித் தளபதி ஆரமுதன் அவர்களும், கிட்டுப் பீரங்கிப் படையணியின் தளபதிகளில் ஒருவரான வீஸ்மன் அவர்களும் கைலாகு கொடுத்து ஆரம்பித்து வைத்தார்கள். நடைபெற்ற மத்திய தென் முனை அணிக்கான இறுதிச் சுற்றுப் போட்டியில் மத்தியமுனை அணி லெப்.கேணல் கில்மன் 2005 சுற்றுக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. வெற்றிபெற்ற அணிக்கான சுற்றுக் கிண்ணத்தை லெப்.கேணல் கில்மன் அவர்களின் சகோதரரும் வட போர் முனை கட்டளைத் தளபதியுமான கேணல் தீபன் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். (லோ)

## விளையாட்டுத் துறையில் திறமை காட்டிய கிளிநொச்சி ம.வி. மாணவர்கள் கௌரவிப்பு



மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் விளையாட்டுத்துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மெய்வன்மைப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய, மாகாண நிலைக்குத் தெரிவு செய்யப்பட்ட வீரர்களில் 130 வீர வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டனர். சாதனையாளர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களையும், பரிசில்களையும், சான்றிதழ்களையும் வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர், விஞ்ஞான பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் மு. இரவீந்திரன் ஆகியோர் வழங்கி கௌரவித்தனர்.

கிளிநொச்சி ம.வி.யின் கடினப்பந்து அணியின் பயிற்றுவிப்பாளராக இருந்து சிறப்பாகப் பணியாற்றிவரும் அலன் அவர்களும் கௌரவிக்கப்பட்டார். (கு)



## பாடசாலை மட்ட அஸ்ரா கிண்ண கிரிக்கெட் தொடர் போட்டி சமநிலை; புள்ளி அடிப்படையில் ஸ்கந்தா வெற்றி

பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் அஸ்ரா கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடர் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் யாழ்.ஸ்கந்தவரோதயா அணிக்கும் கிளி.ம.வி அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற போட்டி சமநிலையில் முடிவுற்றது.

மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளி.ம.வி அணித்தலைவர் சி.ஜெயசீலன் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். இதன்படி தனது முதல் இன்னிங்சிற்காகத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணி 199 ஓட்டங்களிற்கு தனது அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஜெலன்ஸ் 70, பிரகாஸ் 40,லதீஸ் 19,நிரோஜன் 13, நிசாகரன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பாகப் பந்து வீசிய சி.ரவிக்குமார் 14.5 ஓவர்கள் பந்துவீசி 52 ஓட்டங்களைக்கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மேலும் ஜெயசீலன் இரண்டு, அனுசன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸ்சை ஆடிய கிளி.ம.வி அணியினர் 139 ஓட்டங்களிற்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் சி.ரவிக்குமார் 27,க.அனுசன்16, ந.கோகுலன் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கஜந்தன் நான்கு, ராஜ்குமார் மூன்று,சஜந்தன் இரண்டு,நிரோஜன் ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். தனது இரண்டாவது இன்னிங்ஸ் சிற்காகத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணி ஆட்டநேர முடிவின்போது மூன்று விக்கெட் இழப்பிற்கு 100 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பிரகாஸ்19,ஜெலென்ஸ்,லதீஸ் ஆகியோர் முறையே 36,15 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். பந்துவீச்சில் ந.கோகுலன் இரண்டு, ம.அனட்புலக்சன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். போட்டி சமநிலையில் முடிவடைந்த போதும் புள்ளிகளின் அடிப்படையில் ஸ்கந்தா அணி வெற்றி பெற்றது.

நடைபெற்றுவரும் மேற்படி அஸ்ரா கிண்ணப்போட்டித் தொடரில் கிளிநொச்சி ம.வி. யின் 17 வயதுப் பிரிவு அணி எந்தவொரு அணியுடனும் இனிங்ஸ் தோல்வியைச் சந்திக்காதது குறிப்பிடத்தக்கது.

## கங்கை அமரன் நினைவாக கால்பந்து போட்டி
## சென்ஜோசப்,கிறின்வில் அணிகள் வெற்றி

லெப். கேணல் கங்கை அமரனின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் முதன் முதலாக மின் ஒளியில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் ஆரம்பமான இப்போட்டியில் வவுனியா ஜங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை பணங்கட்டிகொட்டு சென்ஜோசப் விளையாட்டுக்கழகம் 3-0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. மற்றுமொரு போட்டியில் பள்ளிமுனை விளையாட்டுக்கழகம் சின்னக்கரை கிறின்வில் விளையாட்டுக்கழகமும் மோதியதில் கிறின்வில் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

இப்போட்டிகளுக்கு நடுவராக ஜெயந்தன், ஜேக்கப் ஆகியோர் கடமையாற்றினர். இதற்கான சகல ஏற்படுகளையும் மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறையினர் மேற்கொண்டுள்ளனர். (18)



பாரதி, அருணோதயா அணி வீரர்கள்



சென்அன்ரனிஸ், சென்பிலிப்நேரி அணிவீராங்கனைகள்

கரும்புலிகள் நாளைமுன்னிட்டு வடமராட்சிகிழக்குப் பிரதேச கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில் நேற்று தாளையடி பொதுவிளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற கால்பந்து, வலைப்பந்து இறுதிப்போட்டிகளில் பாரதி அணியும், தாளையடி சென்அன்ரனிஸ் அணியும் வெற்றி பெற்றன. (படம் - பிரதீபன்)

## நட்வெஸ்ட் கிண்ண எட்டாவது ஒரு நாள் போட்டி
## அவுஸ். – இங்கிலாந்து அணிக்கு சம புள்ளிகள்

இங்கிலாந்தில் நடைபெறும் நட்வெஸ்ட் கிண்ண முக்கோண ஒரு நாள் தொடர் நேற்று முன்தினம் இங்கிலாந்து. அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இறுதி லீக் போட்டி மழை காரணமாக இரு அணிகளுக்கும் சம புள்ளிகள் வழங்கப்பட்டு நிறுத்தப்பட்ட போதும் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த போது இரு அணிகளும் முறுகல் நிலைக்கு வந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

போட்டியின் போது அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் மத்தியுகெய்டன் அடித்த பந்தை இங்கிலாந்து அணியின் சைமன் ஜோன்ஸ் தடுத்து விக்கெட்டைநோக்கி எறிந்து துடுப்பாட்ட வீரரை ஆட்டமிழக்கச் செய்ய முயன்ற போது பந்து ஹெய்டனின் தோள் பட்டையில் பட்டதால மேற்படி முறுகல் நிலை தோன்றியதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கு ஜோன்ஸ் மன்னிப்புக் கோரிய போதும் கெய்டன் காரசாரமாகப் [illegible] ள்ளார். இந்நிலையில் மறுமுனையிலி [illegible] வுஸ்திரேலிய அணித்தலைவர் றிக்கி பொண்டிங் விரைந்து வந்து சமரசம் செய்ததுடன் இங்கிலாந்து வீரர் ரெஸ் கொதிக்கும்,கெய்டனின் தோளைத் தடவி ஆறுதல்படுத்தினார். பின்னர் வீரர்கள் களத்தில் ஒன்று கூடினர்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோன் போட்டிகள் இரு அணிகளுக்கும் தீவிரமாகிச் செல்வதால் இது போன்ற சம்பவம் நடப்பது முடிந்து விடாது என்றும் சனியன்று நடைபெறும் இறுதிப் போட்டி இன்னும் அனல் பறக்கும் என்றார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி லீக் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஒன்பது விக்கெட் இழப்புக்கு 261 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்த இங்கிலாந்து அணி ஆறு ஓவர்களைச் சந்தித்து 37 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து மழை குறுக்கிட ஆட்டம் கைவிடப்பட்டு இரு அணிகளுக்கும் தலா மூன்று புள்ளிகள் வழங்கப்பட்டன.




## நீர்ப்பந்துப் போட்டி

கரும்புலிகள் நாளை முன்னிட்டு வடமராட்சி கிழக்குப் பிரதேச கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில் ஆண்களுக்கிடையிலான நீர்ப்பந்துப்போட்டி, படகோட்டப் போட்டி என்பன தாளையடி கடற்பரப்பில் இன்று காலை 8.00 மணியளவில் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை பெண்களுக்கான நீச்சல் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (தீ)



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு



பயிற்சி-தந்திரம்-துணிவு இந்த மூன்றும் ஒரு படையணிக்கு அமையப் பெறுமாயின் வெற்றி நிச்சயம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 30-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## ஐ.தே.க.வின் அவஸ்தை!

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் ஆதரவு- எதிர்ப்பு என இரு அணிகள் மட்டும் தான் உண்டென்பதல்ல. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அதாவது எதிர்க்கவும் முடியாமல் –ஆதரிக்கவும் முடியாமல் அவஸ்தைப்படும் ஒருதரப்பும் உண்டு என்பதே உண்மையாகும். ஐ.தே. கட்சி அத்தகையதொரு நிலையிலேயே பரிதவித்துவருகிறது.

பொதுக்கட்டமைப்பைப் பொறுத்து கொள்கையளவில் ஐ.தே. கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. ஆனால் இதனைப் பொதுக் கட்டமைப்பின் அமுலாக்கத்திற்கு வழங்கிய ஆதரவாகக் கொள்ளலாமா? என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளுதல் என்பது நடைமுறைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவோ, அங்கீகரிக்கப்பட்டதாகவோ அர்த்தம் கொள்ளுதல் முடியாத விடயமாகும்.

கொள்கைஅளவில் ஏற்றுக்கொள்ளுதல் என்பது விவாதத்திற்கு ஏற்றுக்கொள்ளுதல் அன்றி பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளுதல் என்றே அர்த்தப்படும். ஆகையினால் ஐ.தே. கட்சி பொதுக்கட்டமைப்பை ஆதரிப்பதாக அர்த்தம் கொள்வது தவறாகும். ஆனால் ஐ.தே.க ஏற்றுக்கொண்டதோ, இல்லையோ அக்கட்சி பெரும்நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது என்பது உண்மையே.

அதாவது ஐ.தே. கட்சி வெளித்தோற்றத்துக்குப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டிய நிலையிலுள்ளது. ஏனெனில் இப்பொதுக்கட்டமைப்பிற்கு சர்வதேச ரீதியில் பலமான ஆதரவு உண்டு. அமெரிக்கா உட்பட பல அரசுகளும், ஐ.நா சபை உட்பட சர்வதேச அமைப்புக்கள் பலவும் இப்பொதுககட்டமைப்பை ஆதரிக்கின்ற.

இது ஒருபுறம் இருக்க–விடுதலைப்புலிகள் அமைப்பும் இப்பொதுக்கட்டமைப்புத் தேவையென வலியுறுத்தி வந்தது. இந்நிலையில் ஐ.தே கட்சியினால் பொதுக்கட்டமைப்பை வெளிப்படையாக எதிர்க்கமுடியவில்லை. ஆனால் இடையிடை குறைபாடு களைச் சுட்டிக்காட்டி தமது இருப்பையும் வெளிப்படுத்தி வருகின்றது.

ஆனால் அடிப்படையில் ஐ.தே. கட்சி பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டதாக உள்ளது. ஐ.தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிசும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சிறிது சிறிதாக பொதுக்கட்டமைப்பினரைப் பிரஸ்தாபிக்கத் தொடங்கிவிட்டனர்.

எடுத்துக்காட்டாக பொதுக்கட்டமைப்புக் குறித்து பிரஸ்தாபித்த பேராசிரியர் பீரிஸ் இவ் உடன்பாடு நாட்டின் இறைமைக்கு மாறானது எனவும் முஸ்லிம் மற்றும் சிங்களவருக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்கவில்லை எனவும் அரசாங்கத்தின் பிரதிநிதித்துவம் சிங்களவரின் பிரதிநிதித்துவம் ஆகாது எனவும் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார்.

பேராசிரியர் பீரிஸ் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டின் படி வடக்கு–கிழக்கில் புனர்நிர்மாணப் பணிகளின் தலைமை விடுதலைப் புலிகளிடம் சென்றுள்ளதால் நாட்டின் இறைமை பாதிக்கப்பட்டுள்ளது எனக் கூறுவது சரியானவாதமல்ல. ஏனெனில் இது ஒரு புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான அமைப்பே ஒழிய அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதான அமைப்பல்ல. ஆகையினால் இறைமை தொடர்பான விவகாரத்திற்கும் இதற்கும் தொடர்பு இருப்பதாக கூறுவது அர்த்தமற்றதொன்று.

இதனைத் தவிர இறைமை பற்றிப்பேசுவதானால் கடந்த ஐ.தே. கட்சி அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்பாட்டின் போது எழுந்த இறைமை பற்றிய கேள்வியைவிட இது ஒன்றும் இறைமைக்கு குந்தகம் விளைவிப்பதாகிவிடாது.

மேலும் தமிழர் தரப்புடன் (விடுதலைப்புலிகளுடன்) உடன்பாடு ஏனெனில் மறுதரப்பு சிங்களத் தரப்பு என்றே அர்த்தம் கொள்ளப்படும். அதனை அரசாங்கத்தரப்பு என்றும் சிங்களத்தரப்பு என்றும் பாகுபாடு படுத்தி அர்த்தப்படுத்த முனைவது குழப்பத்தைத் தோற்றுவிப்பதற்கான முயற்சியே ஒழிய வேறில்லை.

அடுத்ததாக முஸ்லிம் தரப்பின் பிரதிநிதித்துவம் குறைவு என்ற வாதமும் ஏற்புடையதாக கொள்வதற்கில்லை. உயர்குழுவிலும் பிராந்தியக்குழுவிலும் அவர்களுக்குரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதாகவே உள்ளது. இந்நிலையில் முஸ்லிம் மக்கள் பற்றி ஐ.தே. க பேசுவது அரசியல் இலாப நோக்கிற்கானதும், பொதுக்கட்டமைப்பிற்கு இடையூறு விளைவிக்கும் நோக்கிலானதுமே யொழியவேறில்லை.

சுருக்கமாகக் கூறுவதானால் தற்போதைய அரசியல் சூழ்நிலை காரணமாக பொதுக்கட்டமைப்புக் குறித்து ஐ.தே.க தனது சுயரூபத்தை வெளிப்படுத்த முடியாத நிலையிலுள்ளது என்பதே நியமாகும். அல்லாவிடின் ஐ.தே.க வும், பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக தனது சுயரூபத்தை இதுவரையில் வெளிப்படுத்தியிருக்கும்.

# பொதுக்கட்டமைப்பு உபகுழுக்களில் முஸ்லிம் பிரதிநிதித்துவம்; நோர்வே, புலிகளுடன் பேசஅரசு உத்தேசம்

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண சபையில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது சம்பந்தமாக நோர்வேத்தரப்புடனும், விடுதலைப் புலிகளுடனும் அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளது.

ஆழிப்பேரலை நிவாரண சபையின் கீழ் நியமிக்கப்படவுள்ள உப குழுக்களில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை சமப்படுத்தும் நோக்கில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதாக சனாதிபதி மாளிகை வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்வைத்த கோரிககைகள் மற்றும் யோசனைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அரசாங்கத்தின் மீது அவர்கள் காண்பிக்கும் எதிர்ப்பை குறைப்பதற்காகவும் உபகுழுக்களில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது சம்பந்தமாக சனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார்.

இது சம்பந்தமாக முஸ்லிம் அமைசசர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சனாதிபதியுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடவுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஆழிப்பேரலை நிவாரண சபையின் கீழ் அமைக்கப்படவுள்ள பிரதேசக் குழுக்களில் ஐந்து விடுதலைப்புலிபிரதிநிதிகளும், மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளும், இரண்டு அரசாங்கப்பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பார்கள்.

தற்போது இருக்கும் இரு அரச பிரதிநிதிகளில் ஒருவரை முஸ்லிம் பிரதிநிதியாக நியமிக்க திட்டமிட் டுள்ளது. அதன்படி பிரதேச குழுக் களில் நான்கு முஸ்லிம் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர். அத்துடன் இந்த குழுக்களில் இரு முஸ்லிம் பிரதிநித தலைவர்களை நியமிப்பது சம்பந்த மாகவும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இது சம்பந்தமாக நோர்வேயுடன் விடுதலைப்புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளதாக அரசாங்கம முஸ்லிம் அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளது.

ஆழிப்பேரலை நிவாரண சபையினூடாக முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பின் அந்த சபையின் கீழ் நியமிக்கப்படவுள்ள பிரதேச குழுக்களில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முடியுமென ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

-மின்சாரசபை மறுசீரமைப்பு தொடர்பாக-

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் யோசனைக்கு தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்கா மின்சார சபையை மறுசீரமைக்கையில் அதனை மூன்று நிறுவனங்களாகப் பிரிக்காதவிடத்து அதற்கான நிதியுதவி வழங்கப்பட மாட்டாதென ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது.

சிறிலங்கா மின்சார சபையை மறுசீரமைக்கையில் கட்டாயமாக அதனை மூன்று நிறுவனங்களாகப் பிரிக்குமாறு ஆசிய அபிவிருத்தி வங்கி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்நடவடிக்கை எடுக்கப்படாதவிடத்து சிறிலங்கா மின்சார சபைக்கு கடனுதவி வழங்கப்படமாட்டாதென ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளதென மின்சாரசபை மறுசீரமைப்பிற்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் விமல் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் தலைமையில் திங்கட் கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார் என மின்சாரசபை தொழிற சங்க ஒன்றியத்தின் இணைப்பாளர் ஆனந்த நிமலரத்ன தெரிவித்துள்ளார்.

பிரதமர் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் மின்சார சபையின் தொழிற் சங்கப் பிரதிநிகளும் கலந்து கொண்டனர்.

மின்சாரசபையை மூன்று நிறுவனங்களாக மாற்றும் யோசனையை மின்சார சபை தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எதிர்த்துள்ளனர். மின் விநியோகத்திற்காக மாத்திரம் சபையின் கீழ் ஒரேயொரு நிறுவனத்தை ஏற்படுத்துமாறே தொழிற் சங்கங்கள் தெரிவித்திருந்தன.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடா பில் நடைபெற்ற இந்தக் கூட்டம் எதுவித முடிவும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்துள்ளது.

# ரெஜினோல்ட் கூரேயை முதல்வராக்கும் திட்டத்தை ஐ.தே.கட்சி கைவிட்டது

(கொழும்பு)

மேல்மாகாண சபையில் ரெஜினோல்ட் கூரேயை முதலமைச்சராக்கும் திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி கைவிட்டுள்ளது.

ஐ.தே.க.வின் 39 உறுப்பினர்களும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் 30 உறுப்பினர்களும் ரெஜினோல்ட் கூரேயை மீண்டும் முதலமைச்சராக்க வலியுறுத்தி ஆளுநர் அலாவி மௌலானவிடம் மனு அளித்திருந்தனர்.

இந்தநிலையில் ஐ.தே.க. பேச்சாளர் சுஜீவ சேனசிங்க ஊடக வியலாளர் மாநாட்டில் தமது கட்சி இம்முடிவை கைவிட்டுவிட்டதாகவும் கடந்த வாரம் பொறுப்பேற்ற நந்தா மெண்டிஸ் தொடர்ந்து பதவியில் இருப்பார் என்றும் கூறினார்.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுக்கு முன்னுரிமை கொடுத்தே கட்சிப பணிகள் நடைபெற வேண்டும் என்று ஐ.தே.க. தலைமை முடிவெடுத்திருப்பதால் ரெஜினோல்ட் கூரேயை மீண்டும் முதல்வராக்கும் திட்டத்தை கைவிட்டதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

# சுயலாபத்திற்காக சனாதிபதி சந்திரிகா நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டார்

- தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கண்டனம்-

(கொழும்பு)

விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் கைச்சாத்திட்டுள்ள பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தத்தைப் பார்த்து அரசாங்கத்தின் அமைச்சர்களே ஆச்சரியமடைந்ததாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் நெருக்கமான கூட்டமைப்பு அமைச்சர்களிடமிருந்து பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தைக் பாதுகாத்து வைப்பதற்காக பெரும்பணம் படைத்த அரச சார்பற்ற நிறுவனங்களிடம் சனாதிபதி அதனைக் கையளித்திருந்தாகவும், எனினும், அந்த ஒப்பந்தம் பிரதமர் உட்பட்ட தேசப்பற்றுள்ள அமைச்சர்களிடம் முன்னரே காண்பிக்கப்பட்டிருந்தால் விடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு அனுமதித்திருக்க மாட்டார்களெனவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் மேலும் தெரிவித்துள்ளது. சுயலாபத்துக்காக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டாரெனவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழக்குவதற்காக இந்தப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்ற போதும், இந்தக் கட்டமைப்பானது தனிநாடு கோரிவரும் விடுதலைப்புலிகளுக்கு தனிநாட்டுக் கோரிக்கையை நிறை வேற்றும் முகமாக அமைந்திருப்பதா கவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# லெப்.கேணல் கங்கை அமரன், மேஜர் தசாதரன்;

## நான்காம் ஆண்டு நினைவு நிகழ்வுகள்

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்கா இராணுவத்தின் நீண்டதூரம் ஊடுருவித் தாக்கும் படைப்பிரிவின் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தமிழீழக்கடற்படையின் தளபதியான லெப். கேணல் கங்கைஅமரன், மேஜர்தசாதரன் ஆகிய மாவீரர்



களின் நான்காம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு சிறப்புற நடைபெற்றுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 5.00 மணிக்கு பூநகரி கிராஞ்சியில் அமைந்துள்ள லெப். கேணல் கங்கைஅமரன் நினைவு மண்டபத்தில் தேசியக்கொடி ஏற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரைத்தமிழீழக் கடற்படைத் தளபதி மங்களேஸ், மன்னார் கடற்படை மகளிர் தளபதி தமிழவள் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து மாவீரர் லெப். கேணல் கங்கைஅமரன் அவர்களின் உருவப்படத்திற்கு அவரின் தாயார் சுடர் ஏற்றிவைத்தார். உருவப்படத்திற்கான மலர் மாலையை கங்கைஅமரனின் துணைவியார் அணிவித்தார். அதே சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மேஜர் தசாதரனின் திருவுருவப்படத்திற்கு தசாதரனின் தயார் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட போராளிகள், பொதுமக்கள் மலர் வணக்கம் செலுத்தினர். அடுத்து ஆரம்பமான மேடை நிகழ்வில் சிறப்புரைகள், பரிசில்கள் வழங்கல், கலைநிகழ்வுகள் என்பன இடம் பெற்றன.

இந்நிகழ்வில் தமிழீழகடற்படைத்துணைத் தளபதி செழியன், தமிழீழ கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் மோகன் உட்பட பெருமளவான போராளிகள், பொதுமக்கள், கலந்து சிறப்பித்தனர். (லோ)

# கடற்தொழிலுக்கு 'பாஸ்' நடைமுறை மீனவர்கள் நேற்று கடும் ஆட்சேபம்!

(பருத்தித்துறை)

வடமராட்சி தொண்டமனாறுப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு நேற்று முதல் பாஸ் அனுமதி பெற்றுச் செல்லவேண்டுமென சிறிலங்கா கடற்படையினர் அறிவித்துள்ளனர். இதற்குஅப்பகுதி கடற்றொழிலாளர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலுக்குச் சென்ற வேளையே இவ்வாறு கடற்படையினர் 'பாஸ்' எடுத்தபின்புதான் கடற்றொழில் செய்ய அனுமதிக்க முடியுமெனத் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து கடற்தொழிலாளர்கள் இதற்கு கண்டனம் தெரிவித்ததோடு இது தொடர்பாக தொண்டமனாறு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவரிடம் முறையிட்டுள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டகடற்தொழிலாளர்கள் தமது உடமைகளை இழந்துபல சிர[illegible] மங்களுக்கு மத்தியில் கடற்தொ[illegible] லுக்குச் செல்கின்றனர். இந்த நி[illegible] யில் பாஸ் அனுமதியென்பது [illegible] த்த நெருக்கடிகளை ஏற்படுத்[illegible] இதனால் அவர்கள் பெரிதும் விச[illegible] அடைந்து காணப்படுகின்றனர். (கா[illegible]

### திருத்தம்

கடந்த 13.06.2005 ஈழநாதம் நாளேட்டின் மு[illegible]லாம் பக்கத்தில் வெளியான வீர[illegible]வு குறித்த செய்தியில் மூன்றாவதாக இடம்பெற்ற போராளியின் பெயர் வீரவேங்கை சிவாசினி என்பதற்குப் பதிலாக வீரவேங்கை சிவாசி எனத்தவறாக இடம் பெற்றுள்ளது.

# சுனாமி கூடாரம் தீப்பிடித்தது பிள்ளையை மீட்டவர் காயம்

(மட்டக்களப்பு)

வாகரைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாவடிஓடையில் தற்காலிக கூடாரம் ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சமைத்துவிட்டு அடுப்பில் இருந்த நெருப்புத் தணல் காற்றில் பறந்து கூடாரத்தில் வீழ்ந்ததால் தீப்பிடித்தது.

இதன்போது வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்த [illegible]னது பிள்ளையைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்ட தந்தை மீது தீப்பிடித்தது. அவர் உடனடியாக வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# பண்ணைப் பாலம் உடைந்தது!



யாழ்ப்பாணத்தையும், தீவகத்தையும் இணைக்கும் பிரதானபாலமான பண்ணைப் பாலம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் உடைந்தது. மிகநீண்ட காலமாகபுனரமைக்கப்படாமல் காணப்படும் இப்பாலத்தின் இரண்டு பகுதிகளிலும் சிறிலங்காப் படையினர் அரண் அமைத்து நிலை கொண்டுள்ளனர். இருப்பினும் இப் பாலம் புனரமைப்புத் தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் அவர்களால் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் இப்பாலம் நேற்று உடைந்துள்ளது. இதனால் இவ் வீதிவழியான பேருந்துப் போக்குவரவுகள் தடைப்பட்டன. பாரிய இரும்புத் தகடுகள் உடைந்த பாலத்தின் மேல் தற்காலிகமாக இடப்பட்டு அதன் மேலாக போக்குவரவுகள் நடைபெறுகின்றன.

# வெலிக்கடைச் சிறைக்குள்ளிருந்து தாக்குதல் நான்கு சிறைச்சாலை அதிகாரிகள் காயம்!

## பாதாள உலகக் குழுவின் கைவரிசை

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள்ளிருந்து பாதாள உலகக் குழுவினர் நடத்திய தாக்குதலில் நான்கு சிறைச்சாலை அதிகாரிகள் காயமடைந்தனர். இந்தச்சம்பவம் நேற்று இடம்பெற்றது.

பிரின்ஸ் கொலம்என்ற பாதாள உலகத் தலைவரை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்து வந்தபோது ரிஸ்வான் என்ற பாதாள உலகத் தலைவரின் குழுவைச் சேர்ந்த[illegible] சிறைக்குள்ளிருந்து குறித்த பி[illegible] கொலம்என்ற பாதாள உ[illegible] தலைவர் மீது துப் பாக்கிப் பிர[illegible] செய்துள்ளனரெனத் தெரிவி[illegible] பட்டுள்ளது.

### சனாதிபதி...

தர்களுக்கும் சனாதிபதிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் யாரென அறிவிக்காமையினால் கட்சியின் பிரச்சார நடவடிக்கைகள் பெருமளவு பின்னடைந்திருப்பதாக சிரேஷ்ட உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். எவ்வாறாயினும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் அடுத்த சனாதிபதி வேட்பாளர் யாரெனச் சனாதிபதி அறிவிப்பாரென அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சமாதானம்....

ஐரோப்பிய யூனியனின் உதவிகள் முன்னர் போன்று இனியும் தொடரும். குறுகிய கால மற்றும் நீண்டகாலத்திட்டங்களை அமுல்படுத்தமுடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது. தற்போது இவ் விடயத்தில் சுனாமி பொதுக்கட்டமைப்பு முக்கியத்துவம் பெறுகிறது.ஆசிய அபிவிருத்திவங்கி மற்றும் ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட உதவி வழங்கும் தரப்புகளிற்கு பொதுக்கட்டமைப்பு அவசியமானது. எதிர்வரும் 18 மாத காலப்பகுதியினுள் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கான உடனடி உதவிகள் வழங்கப்படும். அத்துடன் எதிர்வரும் காலங்களில் சுனாமி கடல் அனர்த்தம் ஏற்படுவதைக் கண்டறிவதற்கான தொழில்நுட்ப வசதிகளும் வழங்கப்படவுள்ளது என்றார். (27)

### பொதுக்...

ப்பாடுகள் அரசாங்கதரப்பிடமே தொடர்ந்தும் இருக்கும் என்றும் அவை விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்படமாட்டாது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### காலி...

தான வீதி வரை பாய்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மீனவப்படகுகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இடங்கள் அச்சுறுத்தலுக்குள்ளானதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

### சனாதிபதிக்கு...

கைச்சாத்திடப்பட்டதாக அரசாங்கம் கூறிவருவதாகச் சுட்டிக்காட்டியுள்ள சிரேஷ்ட பௌத்த மதகுரு ஒருவர் எனினும், தான் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென அஸ்கிரிய பீடாதிபதி "கரக சபா"விடம் தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஒமல்பே சோபித தேரர் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த காலத்தில் வழங்கிய உறுதிமொழியினை சனாதிபதி காப்பாற்றத் தவறிவிட்டதாகவும் சில பௌத்த குருமார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா மீது இனிமேல் எமக்கு நம்பிக்கை வைத்திருக்க முடியாது அவருக்கு எதிராக பௌத்த உயர்சங்க ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என தேசியபௌத்தபிக்கு முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் பௌத்த பீடாதிபதிகளுக்கு இம்மாதம் 27 ஆம் திகதி அறிவித்துள்ளார். விடுதலைப்புலிகளுடன் சுனாமி கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளபடியால் இவர் நாட்டையும் நாட்டு மக்களையும் காட்டிக் கொடுத்துள்ளதாகவும் அவருக்கு எதிராக நாட்டிலுள்ள 30 ஆயிரம் பிக்குமார்களை ஒன்றிணைத்து ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

### பத்திரிகை...,

வர் சுட்டுக் கொல்லப்பட்ட இடம் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள பகுதி என்பது கவனிக்கத்தக்கது.

அரசகுமார் மட்டக்களப்பு ஈழநாதம் தொடக்கப்பட்ட நாட்களிலிருந்து பணியாற்றி வந்தவராவார். இவர் மூன்று குழந்தைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது.

துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த சம்மாந்துறை சிறிலங்காப் பொலிசார் சடலத்தை கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

பகல்1.30மணியளவில் உயிரிழந்தவரின்மனைவியோகராணி சடலத்தை அடையாளம் காட்டினார்.

அதன் பின் கல்முனை நீதவான் சடலத்தைப் பார்வையிட்டதுடன், பிரேத பரிசோதனை நடத்துமாறு உத்தர விட்டார். இதனையடுத்து கல்முனை வைத்திய அதிகாரி டாக்டர்சசிதரன் பிரேதப் பரிசோதனை மேற்கொண்டார். பின்னர் நீதவான் மரண விசாரணைகளை மேற் கொண்டதுடன், சம்மாந்துறைப் பொலிசாரினால் வாக்கு மூலம் பெறப்பட்டது.

காலஞ்சென்றவரின் ம[illegible] யோகராணி,ஈழநாதம் (மட்டக்[illegible] பதிப்பு) பொதுமுகாமை[illegible] திருநாவுக்கரசு ஆகியோர் [illegible] மூலம் அளித்தனர்.


இதனையடுத்து சடல[illegible] வினர்களிடம் கையளிக்கப்[illegible] அடுத்து கொக்கட்டிச்சோ[illegible] எடுத்துவரப்பட்டு அவரது இ[illegible] அஞ்சலிக்காக வைக்கப்[illegible]

### எதிர்க்கட்சி...

இதனையடுத்து அதுவும் நோர்வேயின் நிகழ்ச்சித்திட்டத்தில் அடங்கியுள்ளதா எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விதார் ஹெல்கேசனிடம் கேள்வி எழுப்பியுள்ளார். இதேவேளை பொதுக்கட்டமைப்பு ஆவணத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சனாதிபதி கேட்டுக் கொண்டபோதும் அதனை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மறுத்து விட்டதாக ஏசியன் ரிபியூன் தெரிவித்துள்ளது.


மெகா
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
10-07-2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
ASIAN COMPUTERS
♦யாழ்ப்பாணம் ♦சுன்னாகம்
♦சாவகச்சேரி ♦நெல்லியடி ♦கிளிநொச்சி
(சி-12146)


## கண்ணீர் அஞ்ச[illegible]



### திரு.கன்னமுத்து அரசகும[illegible]

(மட்டு. ஈழநாதம் பத்திரிகை விநியோகஸ்த

அம்பாறை மாவட்டம் அட்டப் பள்ளத்தில் வைத்து நேற்றுக்கா[illegible] சுட்டுக் கொல்லப்பட்ட ஈழநாதம் பத்திரிகை விநியோகஸ்[illegible] கன்னமுத்து அரசகுமார் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்ச[illegible] செலுத்துவதுடன், அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அ[illegible] குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவி[illegible] கொள்கின்றோம்.

-ஈழநாதம் கிளிநொச்சி.

(சி.12271)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.